# நூறு நாள் புரட்சி பற்றி நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படும் கூற்று

## 01. அறிமுகம்

1.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, சரியாக 21 நாட்களுக்கு முன்னர், 2015 சனவரி 8 ஆம் திகதி இந்நாட்டின் மக்கள் மாற்றமொன்றினை வேண்டி மாண்புமிகு சனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களுக்கு வாக்களித்தனர். அவர்கள் தெளிவான ஒரு மாற்றத்தினை வலியுறுத்தி தமது ஆணையினை வழங்கினர். அம்மாற்றமானது, நாட்டில் புதிய அரசியல் மற்றும் பொருளாதார கலாசாரமொன்றினை உருவாக்குவதற்கு கட்சி அரசியல் மற்றும் தனிமனித விருப்புக்களை விட்டும் அப்பாற்பட்டதாக காணப்பட்டது.

1.2 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 19 ஆவது நிதியமைச்சர் என்ற வகையில், முன்னைய நிதி அமைச்சர்களின் சிறப்புமிக்க பாதச்சுவடுகளை பின்பற்றி இந்த இடைக்கால வரவு செலவுத்திட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த மக்கள் நட்பு இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் ஏற்பாடுகள் இலங்கை மக்களுக்கு ஆகக் கூடிய நன்மைகளையும் சலுகைகளையும் வழங்குகின்ற வரவு செலவுத்திட்டமொன்றாக வரலாற்றில் பதியப்படும்.

1.3 அதிமேதகு சனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள் வழங்கிய மனிதாபிமான தலைமைத்துவம் அதனோடு இணைந்ததாக மாண்புமிகு பிரதமரின் ஞானம், முறைகேடான ஆட்சியைத் தவிர்த்து ''மைத்ரி பரிபாலனம்'' என்ற புதியதொரு இலங்கையினை உருவாக்குவதற்கு வழிசமைத்தது. இன்று சமர்ப்பிக்கப்படுகின்ற இடைக்கால வரவுசெலவுத்திட்டமானது மக்கள் நேய அரசாங்கமொன்று மக்களுக்கு சேவையாற்றுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளது என்பதனை எடுத்துக் காட்டக்கூடிய உதாரணமாக திகழ்கின்றது. இந்நிலையில் ''நூறு நாள் புரடசி'' யுடன் ஆரம்பமாகும் சிறந்த நாளையொன்றினை உருவாக்குவதில் ''மாற்றம்'' ஒன்றுக்கான பேரணியுடன் இணைந்து கொள்வதற்கு அனைத்து இலங்கையர்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

அதிகாரம் என்பது தற்காலிகமானது. உத்தியோகபூர்வ பதவிகளும் தற்காலிகமானவையே. எமக்கு வாக்களித்த மக்களின் நம்பிக்கை பொறுப்பாளர்கள் என்ற வகையில் கௌரவமான முறையில் நாட்டுக்கு சேவையாற்றுவது எமது கடமையாகும். நாம் மக்களின் சேவகர்கள் என்பதனை மறந்து விடமுடியாது அவர்களுக்கு சேவையாற்றுவது எமது கடமையாகும்.

1.4 இலங்கையர்கள் மீண்டும் சந்தோச பரவசத்தில் காணப்படுகின்றனர். இச்சந்தோசமானது சுதந்திரம், விடுதலை மற்றும் தைரியத்தினை பெற்றுக் கொடுத்துள்ளது. குடும்ப ஆட்சி மற்றும் தகாத சலுகைகளைப் பெற்றுக் கொண்டிருந்த குடும்ப ஆதிக்கத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றமை மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கௌரவ சபாநாயகர் அவர்களே, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே நான் இவ்வுரையினை முடிப்பதற்கு முன் இந்த சந்தோசங்கள் மேலும் அதிகரிக்கும். அவர்கள் இங்கு அறிவிக்கப்படவுள்ள அளவுக்கதிகமான நன்மைகளுக்கு உரித்துடையவர்களாவர்.

அத்துடன் அவர்கள் நீடித்த எதிர்காலம், மகிழ்ச்சிகரமானதும் சிறந்ததொரு வாழ்க்கைக்கும் உரித்துடையவர்களாக இருப்பர். அனைவரும் மாற்றத்தின் இதமான தென்றலை அனுபவிப்பர். நலனுக்கான மாற்றமொன்று நேசத்திற்கான மாற்றமாக இருக்கும். அதுதான் கருணைமிக்க ஆட்சி – மைத்ரி ஆட்சி.

1.5 அரசியல் வாய்வீச்சு இலங்கையில் அனைவரிடமும் சாதாரணமாக காணப்படும் அதேவேளை பொருளாதாரம் தொடர்பான வாய்வீச்சானது மிகவும் குறைவாகவே காணப்பட்டது. முன்னைய ஆட்சியில் கடந்த சில வருடங்களாக அவ்வாறான பொருளாதார வாய்வீச்சுக்களை தேவைக்கதிகமாகவே கேட்டோம். இந்த பொருளாதார வாய்வீச்சுக்கள் சிலருக்கு எரிச்சலூட்டுபவையாக இருந்ததுடன் சிலரை வாய்திறக்க முடியாது செய்திருந்தது. ஆனால், உண்மை எப்பொழுதும் கைக்கும் என்பதுடன் அதனை ஏற்றுக்கொள்வது கடினமுமாகும். சீர்குலைந்த பொருளாதாரமொன்று எழுச்சியினையும் போராட்டத்தையும் வேண்டி நிற்கின்றமையினால், இவ் அரசாங்கமானது அதற்கு முன்னுரிமை அளித்துள்ளது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த தேசிய அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பல வரவுசெலவுத்திட்டங்களுக்கு இவ் அறிக்கையானது முன் உதாரணமாக இருப்பதுடன், இவ் அறிக்கையானது யதார்த்தங்களே அன்றி வெறும் வாய்வீச்சுக்கள் அல்ல என்பதை உறுதி செய்கின்றோம்.

1.6. கொப்ல்ஸ் (Gobbells) தத்துவத்தின் மூலம் உந்தப்பட்ட இவ்வாறான பொருளாதார வாய்வீச்சாளர்கள் இலங்கையை ''ஆசியாவின் ஆச்சரியம்'' எனக் கூறுவது யதார்த்தத்தினை அடிப்படையாகக் கொண்ட எம்மில் பலரை அதிசயிக்கச் செய்தது.

1.7 பெப்ரவரி மாதம் 4 ஆந் திகதி பிரித்தானியரிடமிருந்து நாம் சுதந்திரம் பெற்ற அன்றைய தேசிய சுதந்திர தினத்திற்கு இன்றிலிருந்து 6 நாட்கள் உள்ளன. 2015 சனவரி 8 ஆந் திகதியும் இத்தேசம் ''சுதந்திரத்தினை மீளப் பெற்ற'' தினமாக நினைவு கூறப்படும். குடும்ப ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம், ஊழல் நிறைந்த ஆட்சியிலிருந்து சுதந்திரம், ஊழல் கூட்டத்திலிருந்து சுதந்திரம், மோசமான நிர்வாகத்திலிருந்து சுதந்திரம், நீதித்துறை, பொலிஸ், அரசாங்க சேவைகள் என்பவற்றினை மீளப் பெற்றமை மற்றும் சட்டவாட்சி முழுமையாக து்பிரயோகம் செய்யப்பட்ட முறைகேடன ஆட்சியிலிருந்து இந்நாளில் சுதந்திரம் கிடைத்தது. இந்த வகையில் மீளப் பெறப்பட்ட சுதந்திரத்தினை பாதுகாப்பதும் வளர்த்தெடுப்பதும் எமது அடிப்படை கடமையாகும்.

100 நாள் புரட்சி நிகழ்ச்சித்திட்டம் புதிய தசாப்தமொன்றுக்கான அடிப்படையினை வழங்குவதுடன் ''சுதந்திரம் மற்றும் விடுதலை'' என்ற சொற்களுக்கு புதிய அர்த்தத்தினை வழங்குகின்றது. சுயாதீன ஆணைக்குழுக்கள், தகவல் பெறுவதற்கான உரிமை, அரசியலமைப்பு திருத்தங்கள் என்பன நூறு நாள் நிகழ்ச்சித் திட்டத்திற்குள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவ்வாறு மீளப் பெறப்பட்ட சுதந்திரத்தின் விளைவினை அனுபவிப்பதற்கு மக்களுக்கான குறிப்பிடத்தக்களவு பின்புலத்தினை வழங்குகின்றது.

1.8 குடும்ப ஆதிக்கமானது இலங்கையின் பொருளாதாரத்தினை பாதித்தது மாத்திரமல்லாமல் தேசப் பக்திமிக்க சமூகமொன்றாக பின்னிப் பிணைத்திருந்த இலங்கை மக்களை சீரழித்து விட்டது. போதைப் பொருள் வியாபாரிகள், கசினோ சூதாட்டக்காரர்கள் மற்றும் எத்தனோல் மன்னர்கள் எமது சிறுவர்களின் எதிர்காலத்தினை பாழாக்கினர். மக்களின் குரல் நசுக்கப்பட்டதுடன் அவர்கள் மௌனிகளாக்கப்பட்டனர். எனினும், இறுதியில் சிலர் தமக்குள் சிலவற்றினை வெளிப்படுத்தினர். வார்த்தை ஜாலங்களுக்கு மேலதிகமாக ''பொருளாதார படுகொலை'' என்ற வசனம் அகராதியில் சேர்க்கப்பட்டது. உண்மையினை எடுத்துக் காட்டுவதற்கும் கிடைக்கின்ற சான்றுகளின் அடிப்படையிலும் அவ்வாறான பல பொருளாதாரப் படுகொலையாளர்கள் காணப்பட்டனர் எனக்கூறலாம். அவர்கள் நாட்டில் பெரும்பாலோனோர் துன்புறும் வேளையில் இந்நாட்டின் பெருமளவு வளங்களை ஒருசிலர் அனுபவிப்பதை உறுதிசெய்தனர்.

1.9 சனாதிபதித் தேர்தலினைத் தொடர்ந்து பாராளுமன்றத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெரும்பாலான கட்சிகளின் உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் மைத்ரிபால – ரணில் தேசிய ஐக்கிய அரசாங்கமொன்று உருவாக்கப்பட்டது. இது எமது நாட்டின் வரலாற்றில் சுதந்திரத்திற்கு பின்னர் உருவாக்கப்பட்ட தனித்துவமான சந்தர்ப்பமொன்றாகும்.

இன்று, இந்த முன்னெடுப்புகளினால் நாம் இந்நாட்டிற்கு மாற்று வழிமுறையொன்றினை காட்டுவதில் வெற்றியடைந்துள்ளதுடன் அப்பாதையில் மிக மெதுவாக ஆனால் உறுதியான பயணத்தினை ஆரம்பித்துள்ளோம் என்பதனைக் கூறிக் கொள்வதில் நான் பெருமையடைகின்றேன். இது கருணை படைத்த மைத்ரி அரசாங்கத்திற்கான பாதையாகும். ஸ்திரமான நாடொன்றினை நோக்கிய பாதையென்பதுடன் சுபீட்சத்திற்கான பாதையுமாகும். அனைத்தினையும்விட முக்கியமாக சுதந்திரம், மனிதாபிமானம் மற்றும் கௌரவம் என்பவற்றிற்கான பாதையொன்றாகும்.

1.10 பல்வேறு சவால்களுக்கு மத்தியில் துணிச்சலுடன் முன்வந்து இந்த மகத்தான முயற்சிக்காக ஒரே குரலில் தமது வாக்குகளை அளித்த சமயத் தலைவர்கள், அரசாங்க ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுநர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், சுகாதாரத்துறை ஊழியர்கள், மீனவ சமூகத்தினர், மாணவர்கள் உள்ளடங்கலான இளம் வாக்காளர்கள், ஊழியர்கள், தொழில்முயற்சியாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள், போக்குவரத்து துறை ஊழியர்கள், சுயதொழில் புரிநர்கள், ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் இலங்கையிலுள்ள அனைத்து இன மற்றும் சமய குழுக்களைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவருக்கும் கௌரவ சனாதிபதி, கௌரவ பிரதமர் மற்றும் அரசாங்கத்தின் சார்பில் நிதி அமைச்சர் என்ற வகையில் நான் இவ்விடத்தில் நன்றி கூறுவதுடன் எனது மரியாதையினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1.11 முன்னைய அரசாங்கத்தினால் சாதாரண கற்பனைக்கெட்டாத வகையில் வாக்காளர்களை கவர்ந்திழுப்பதற்காக பல்வேறு பொருட்களை இலவசமாக வழங்கியதுடன் அரசாங்க வளங்களை மிதமிஞ்சிய அளவு பயன்படுத்தி

மேற்கொள்ளப்பட்ட தடைகளின் அளவுடன் ஒப்பிடுகையில் உங்களது பங்களிப்பு உண்மையில் மரியாதைக்குரியதாகும். சனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் நாம் இந்நாட்டு மக்களுக்கு நிறைவேற்றுவதற்கு பாரியதொரு வாக்குறுதியினை வழங்கியிருந்தோம். நாம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இந்த நாட்டில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கும் மக்களின் தேவைகளுக்கும் விரைவான தீர்வினை வழங்குவதற்கு 100 நாள் எழுச்சி திட்டமொன்றினை செயற்படுத்துவதாக வாக்குறுதியளித்தோம்.

1.12 இந்நாட்டில் நிலவிய பிரதான பிரச்சினையாக நாம் கருதிய அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினை குறைப்பதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கூடிய விசேடமான நடவடிக்கைகளை செயற்படுத்துவோம் என்பது எமது பிரதான வாக்குறுதியாகக் காணப்பட்டது.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவானது நாட்டில் பெரும்பாலோனோரை தேவையான அடிப்படை உணவை பெற்றுக் கொள்வதிலிருந்து தவிர்த்துள்ளது. ஆகவே, இதற்கு நாம் தீர்வைத் தேட வேண்டியுள்ளது. வறுமைக்கோடு 6.7 சதவீதமாகக் காணப்பட்டதுடன் போசாக்கு குன்றிய சிறுவர்கள் 21.6 சதவீதம் என்பது புள்ளிவிபரம் மாத்திரமல்லாது தொடர்ந்து அதிகரித்து செல்வதையும் காணமுடிகின்றது. எம்மால் முன்மொழியப்பட்ட மாற்றமும் சனநாயக ரீதியில் அளிக்கப்பட்ட வாக்குகளும் இந்த எரியும் பிரச்சினையினை தீர்க்குமென நாம் உறுதியாக நம்புவதுடன் இதற்கு முன்னர் கேள்வியுற்றல்லாத அளவு நிவாரணங்கள் அடுத்து வரும் வருடங்களிலும் அதிகரிக்கப்படும்.

1.13 முன்னைய காலப்பகுதியில் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் பாரிய ஊழல்களை விசாரிப்பதற்கான விசேட ஆணைக்குழுக்களை நியமித்தல், சுயாதீனமான ஆணைக்குழுக்களை தாபித்தல் மற்றும் தேவையான நியமனங்களை வழங்குதல், தேசிய கணக்காய்வு சட்ட மூலம் மற்றும் தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்ட மூலம் என்பவற்றினை அறிமுகப்படுத்துவதுடன் அவை மூன்று வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும். தேசிய மருந்துப் பொருட்கள் கொள்கையினை அறிமுகப்படுத்தல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறைமைக்குப் பதிலாக பாராளுமன்ற முறைமையினை உருவாக்குதல் என்பன இந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நாம் வழங்கிய ஏனைய முக்கிய வாக்குறுதிகளில் சிலவாகும்.

முறைகேடான ஆட்சியில் கடந்த காலங்களில் இடம் பெற்ற ஊழல் நடவடிக்கைகளின் அளவு உச்சத்தினை அடைந்திருந்ததுடன் ஊழலில் தொடர்புற்ற மோசடிக்காரர்களின் குற்றச் செயல்களை சட்டத்தின் ஏற்பாடுகளினூடாக முன் கொண்டுவரப்பட வேண்டியுள்ளது.

1.14 தற்பொழுது நாம் இந்த முன்மொழிவுகளை செயற்படுத்தும் செயன்முறையில் ஈடுபட்டு வருகின்றோம். கடந்த 21 நாட்களாக நாம் எதனைச் செய்துள்ளோம் என்பதனை அவதானிக்கும் பொழுது எமது செயலாற்றுகையினையும் அர்ப்பணிப்பினையும் பற்றிய தீர்மானமொன்றுக்கு உங்களினால் வர முடியும். 100 நாள் புரட்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான தெளிவான தூர நோக்கொன்றுடன் நாம் பணியாற்றி வருவது தெளிவாகும். இன்று சமர்ப்பிக்கப்படுகின்ற இடைக்கால வரவுசெலவுத்திட்டமானது அவ்வாறான முயற்சியில் முன்னெடுத்து வைக்கின்ற மிக முக்கிய அடியொன்றாகும்.

1.15 எமது அரசாங்கம் மக்கள் நலனில் அக்கறை கொண்டது என்பதுடன் முன்னுரிமை அடிப்படையில் நிவாரணங்களை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த இடைக்கால வரவுசெலவுத்திட்டத்திற்கு முன்னர் எரிபொருள் விலைகளை குறைத்ததனூடாக வழங்கப்பட்ட நிவாரணம் மிகச் சிறந்த உதாரணமாகும். எந்தவொரு காலத்திலும் வழங்கப்படாத அளவு அதிகூடிய எண்ணெய் விலை குறைப்பினை முகாமை செய்வதற்கு எம்மால் முடிந்ததுடன் முன்னைய அரசாங்கம் மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய இவ்வாறான திருத்தங்களை ஏன் மேற்கொள்ளவில்லை என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

1.16 பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான எமது உத்தேச நடவடிக்கைகள் அதேபோன்று ஏனைய வருமானம் மற்றும் செலவினை முன்மொழிவுகளை நான் சமர்ப்பிப்பதற்கு முன்னர் 2015 ஆம் நிதியாண்டுக்காக பாராளுமன்றத்தினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட வெடிக்கவிருந்த குமிழாகக் காணப்பட்ட வரவு செலவுத்திட்டம், நாட்டின் பொருளாதார செயலாற்றுகை மற்றும் அது தொடர்பான சில விடயங்களை விளக்குவதற்கு நினைக்கின்றேன்.

## 02. வெடிக்கவிருந்த குமிழ்

2.1 இலங்கை பொருளாதார ஒழுங்கீனங்களைக் கொண்ட ஒரு காலத்தினை கடந்து சென்றுள்ளது. சில நாட்களுக்கு முன்னர் வரை வழங்கப்பட்ட புள்ளிவிபரங்கள் வித்தியாசமான ஒரு நிலையை சித்தரித்துக் காட்டியது. ஒரு போலியான அரசியல் வாய்வீச்சு இடையறா பொருளாதார சாகசங்களுடன் ஒரு நம்பிக்கையூட்டும் வகையில் சித்தரித்துக் காட்டப்பட்டது. பொருளாதார மேதைகள் எனக் கூறிக் கொள்பவர்களின் ஆயுதங்களாக மிகைப்படுத்தப்பட்ட அட்டவணைகளும் வரைபடங்களும் காணப்பட்டன.

2.2 அதிகமாகப் பேசப்பட்ட ''ஆசியாவின் ஆச்சரியம்'' மற்றும் ''மையங்கள்'' வித்தியாசமான விளக்கங்களை வழங்கின. சாதாரண மக்கள் இவர்களின் பொய் மற்றும் ஏமாற்று வலைகளில் முழுமையாக விழவில்லை. அவர்கள் தேசத்தை அழிப்பதில் கவனம் செலுத்தப்பட்ட சில மையங்களிலிருந்து அவர்களது அவதானம் காணப்பட்டது. அவைதான் தொடர்ந்து வளர்ந்து வந்த ''குடு மையங்கள்'', ''எத்தனோல் மையங்கள்'', மற்றும் ''கசினோ மையங்கள்'' என்பனவாகும். எமது நாட்டின் இளம் சந்ததியினர், அப்பாவி சிறார்கள் பலர் போதைப்பொருள் முதலாளிகள், எத்தனோல் மன்னர்கள், கசினோ இயக்குனர்களின் தந்திரங்களுக்கு இரையாகினார்கள்.

2.3 பங்குச் சந்தை வியாபாரத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களின் நகைப்புக்கு இடமாகியது. ''உட்பாய்ச்சல் மற்றும் குவித்தல்'' சக்தி பெற்றவரின் தீர்மானமாக இருந்த அதேவேளை சிறுமுதலீட்டாளர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கினர். வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டபோது தலைமைகள் வயது முதிர்ந்தவர்களை பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு அழைப்பு விடுத்தனர். இதன் விளைவுகளை நன்கு அறிந்திருந்தும் அவர்களின் உள்ளம் இரங்கவில்லை. இதன்போது அப்பாவி ஓய்வூதியக்காரர்கள்கூட பாதிக்கப்பட்டனர். உயர் செல்வந்தர், ''பங்குச்சந்தை முதலாளிகள்'' ஏழைகளின் தயவில் தொடர்ந்தும் தமது இலாபங்களை அதிகரித்தனர்.

2.4 சாகசம் தொடர்ந்தது. முட்டாள்கள் தமது பங்களிப்பினை கச்சிதமாக செய்தனர். பொருளாதாரமானது தொடர்ச்சியாக சரிவடைந்தது. போலிக் கலைஞர்கள் உண்மையாளர்களாக நடித்தனர். கசப்பான உண்மைகள் இனிப்பான பொய்க்குள் மறைக்கப்பட்டன. பொய்கள், மட்டமான பொய்கள் மற்றும் புள்ளவிபரங்கள் குறித்த சித்தரிப்புக்கு சரியாகப் பொருந்தியது. மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொதுக் கடன் படுகையானது அவர்களுடைய அகராதியில் எவ்வித பொருட்டும் அல்லாது காணப்பட்டன.

2.5 “கள்ளக் கும்பல்களின் பொருளாதார முறைமையானது சமூகத்தில் மிகக் கூடிய சுகபோக வாழ்வினை அனுபவிக்கும் கொழுத்த பணக்கார வர்க்கத்தினை உருவாக்கியது. அவர்கள் தமது செல்வத்தை மாத்திரமல்லாமல் உடல் சக்தியையும் வெளிக்காட்டினர். முழு சனத்தொகையிலும் வெறுமனே 2 சதவீதமானவர்கள் தொடர்ந்தும் ஏனையவர்களின் தயவில் வாழ்ந்து வந்தனர். எஞ்சிய 98 சதவீதமானவர்களின் நிலை என்ன? இவர்கள் 2005 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்தும் தமது இடுப்புப் பட்டியை இறுக்கிக் கொள்ளும்படி வேண்டப்பட்டதுடன் அதனை அவர்கள் தொடர்ந்தும் செய்து வந்தனர். பொருளாதார நெருக்கடிகளினால் அவர்களது குடும்பங்கள் சிதைவடைந்தன, ஆபரணங்கள் அடகு வைக்கப்பட்டன, தொடர்ந்தும் தமது வீடுகளில் அடுப்பு எரிவதற்காக அவர்களது பரம்பரை சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டன. அவர்களில் சிலர் மிகவும் மோசமான வறுமை நிலையினை எதிர்கொண்டனர். தாங்கிக் கொள்ள முடியாத வறுமையின் காரணமாக எமது தாய்மார்கள் மற்றும் தந்தைகள், சகோதர சகோதரிகள் ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்வதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக மாத்தறை மஹாநாம சமரவீரப் பாலம் மற்றும் களுத்துறைப் பாலங்களில் கடற்படையினரை காவலில் அமர்த்த வேண்டியதாயிற்று.

2.6 பொருளாதார வாசகங்கள் உயர்தரமிக்க மொழிநடை, அரசியல் மற்றும் பொருளாதார வாய்வீச்சு என்றுமில்லாதளவில் தொடர்ந்தும் எதிரொலித்தது. சாஸ்திரக்காரர்கள்கூட தமது விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ராசி பலன்களை நிர்ணயித்தனர். சமூகத்தின் வெறுமனே 2 சதவீதத்தினரை போஷிப்பதற்கும் ஊட்டி வளர்ப்பதற்கும் ராசிகள் சாதகமாகக் காணப்பட்டன. 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி கேள்விக் கணக்கு கேட்கும் நாளாக இருந்தது. சுதந்திரத்துக்கான ஏற்பாடு நாடு பூராகவும் மாற்றத்திற்கான வாசனை வீசியது.

2.7 அதிகாரிகள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் எண்களில் கவனம் செலுத்தினர். ஏமாற்று மற்றும் பொய்யான பொருளாதாரம் வெளிக்கிளம்பியது. துக்ககரமான செய்தி என்னவெனில் பொருளாதாரமானது மோசமான நிலையில் காணப்படுகின்றது. நல்ல செய்தி என்னவெனில் அது பாதுகாப்பான மற்றும் சிறப்பானவர்களின் கையில் கிடைக்கப் பெற்றிருப்பதனால் அது மீட்சி பெறுவது மிகத் தொலைவில் அல்ல. நாட்டின் பொருளாதாரத்தின் உண்மை நிலையை கண்டுபிடிப்பதற்கு முடியுமாக இருக்கின்றது. அதனை விரிவாக விளங்கப்படுத்த முடியும். அரசியல்வாதிகள், பங்குச் சந்தை முதலாளிகள், போதைப்பொருள் விநியோகஸ்தர்கள் என்று பாராமல் சட்டரீதியற்ற முறையில் சம்பாதித்தவற்றினை மீளப் பெறுவதற்கும் விசாரணைகளை நடாத்துவதற்கும் எம்மால் முடியும். கள்ளக் கூட்டம் மற்றும் வாரிசுகளின் சிறப்புரிமைக்

காலம் முடிவடைந்துள்ளதுடன் தவறுகளை புரிபவர்கள் மற்றும் துஷ்டர்களை மிகைத்த நிலையில் நீதி மேலோங்கி இருக்கும்.

2.8 இறுதியில் குமிழ் உடைக்கப்படும். எமது அரசாங்கமானது தற்பொழுது நிலைமை பற்றி நன்கறிந்துள்ளதுடன் பொருளாதாரத்தினை உயர்த்துவதுடன் சிறப்புக்களுடன் முன்னோக்கிச் செல்லும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மை சித்தரித்துக் காட்டப்படுமென நாட்டு மக்களுக்கு நாங்கள் உறுதியாகக் கூறிக் கொள்கின்றோம்.

2.9 கௌரவ சபாநாயகர் அவர்களே, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே ''மைத்ரி ஆட்சியின்'' சிறப்பாவது நீதித்துறைக்கு புதிய பரிணாமம் ஒன்றினை கொண்டு வருவதுடன் நாட்டில் நீதியினை ஏற்படுத்தும். மிகவும் பொருத்தமான இரண்டு உதாரணங்களை முன்வைக்க விரும்புகின்றேன். 2009 இல் இடம் பெற்ற தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் வெற்றியாளர் சந்தோசப்பட தோற்கடிக்கப்பட்டவர் சிறையிலிடப்பட்டார். இம்முறை வெற்றியாளர் தான் சிறைப்பிடிக்கப்படுவேன் என்ற பயத்திலிருந்து விடுதலை பெற்ற அதேவேளை தோற்கடிக்கப்பட்டவர் மதமுலனையிலுள்ள தனது சொந்த ஊருக்கு செல்வதற்கு மக்களின் செலவில் இலவசமான விமானப் பயணமொன்றினை பெற்றுக் கொண்டார்.

2.10 2015 ஜனவரி 9 ஆம் திகதி கௌரவ மைத்ரிபால சிறிசேன அவர்கள் சுதந்திர சதுக்கத்தில் சனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்வதற்கான செலவினம் வெறுமனே ரூபா 60,000 ஆகக் காணப்பட்ட அதேவேளை இதற்கு முன்னர் 2009 இல் இடம் பெற்ற சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்ச்சிக்காக அதிர்ச்சி தரத்தக்க செலவினம் ரூபா 600 மில்லியன் செலவிடப்பட்டது.

**03. இக்கூற்றின் நோக்கம்**

3.1 இவ்வாறான சூழ்நிலையில் இடைக்கால வரவுசெலவுத் திட்டமொன்றினை சமர்ப்பிப்பது எமது நாட்டின் அரசாங்க நிதிகளில் புதியதொரு தோற்றப்பாடொன்றாக காணப்பட முடியும். இதற்கு முன்னர் பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதுடன் புதிய அரசாங்கம் அவற்றினது புதிய கொள்கைகளை உள்ளடக்கிய முழுமையான வரவுசெலவுத்திட்டமொன்றினை சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கும் வகையில் இப்பாராளுமன்றத்தில் இதற்கு முன்னர் பல தடவைகள் வாக்குப் பணக்கணக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதனை நாம் அறிந்திருக்கின்றோம்.

3.2 எவ்வாறாயினும், இன்று சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையானது அரசாங்கத்திலுள்ள நிரல் அமைச்சுக்களினது கட்டமைப்பில் குறிப்பிடத்தக்கதொரு மாற்றத்தினை நாம் ஏற்படுத்துவதற்கு முழுமையான தேவைப்பாட்டினை ஏற்படுத்தியுள்ளது. முன்னைய அரசாங்கத்தின் நிர்வாகத்திலிருந்து குறிப்பிடத்தக்களவு மாற்றங்களை செய்கின்ற வகையில் அமைச்சுக்களின் எண்ணிக்கையினை 61 இலிருந்து 31 ஆக நாம் குறைத்திருப்பதனை நீங்கள் அறிவீர்கள்.

அமைச்சரவையினை அதிகூடிய விளைவினைத் தரக்கூடியதாகவும் ஆகக் குறைந்த செலவினத்தினைக் கொண்டிருக்கும் வகையில் நிரல் அமைச்சுக்கள் கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளன. புதிதாக உருவாக்கப்பட்ட அமைச்சுக்களுக்கான வளங்களை

மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதுடன் புதிய கட்டமைப்பினை உருவாக்குவதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரமும் கோரப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன், அமைச்சுக்கள் மற்றும் செலவின அலகுகளுக்கு ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்ட மூலத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட செலவின வரையறைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட விபரமான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை வழங்குவதற்கு திறைசேரி செயலாளருக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்கு மேலதிகமாக, எனது உரையின் பிற்பகுதியில் பல்வேறு புதிய வருமானம் மற்றும் செலவின முன்மொழிவுகள் அதேபோன்று பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ள சலுகைகள் பற்றியும் விளக்கப்படுத்துவதற்கு விரும்புகின்றேன்.

3.3 இந்த மாற்றங்களும் முன்மொழிவுகளும் 2014 ஒக்டோபர் 24 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 2014 நவம்பர் 23 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியுள்ளதுடன் அதற்கான சட்ட ஏற்பாடுகளின் தேவையினைக் கருத்திற் கொண்டு இந்த பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

**04. வரவு செலவுத்திட்டம் - 2015**

4.1 2015 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 1,594 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 1,400 பில்லியன் வரி வருமானமாகவும் ரூபா 194 பில்லியன் வரியல்லாத வருமானமாகவும் காணப்பட்டது. மொத்தச் செலவினமும் தேறிய கடன் மீள் கொடுப்பனவு ரூபா 2,990 பில்லியனாக இருந்ததுடன் இதில் மீண்டெழும் செலவினமாக ரூபா 1,465 பில்லியனும் மூலதனச் செலவினமாகவும் தேறிய கடன் பெறுகையும் ரூபா 685 பில்லியனாகக் காணப்பட்டது. 2015 வரவு செலவுத்திட்டத்தில் மதிப்பிடப்பட்ட பற்றாக்குறை ரூபா 521 பில்லியனாகும் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.6 சதவீதமாகும்.

4.2 இந்த பற்றாக்குறையானது அரசாங்கத்தின் வருமானம் மற்றும் செலவினங்களுடன் மாத்திரம் தொடர்புற்றது என நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். எவ்வாறாயினும், இந்த பற்றாக்குறையானது நாட்டின் இன்றைய பொது நிதிகளில் உண்மையான சுமையைப் பிரதிபலிக்கவில்லை. ஏனெனில், அது அரசாங்கத்தின் பல்வேறு வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகளை கவனத்திற் கொள்ளவில்லை என்பதனை இப்பாராளுமன்றத்தில் நாம் அடிக்கடி கூறியுள்ளதுடன் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் பல வருடங்களாக இதனை கலந்துரையாடியுள்ளோம்.

4.3 ஆகவே, உண்மையான நிலைமையினை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்துதல் வேண்டும். நல்லாட்சியினை ஏற்படுத்துகின்ற எமது முயற்சியில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது பொதுமக்களையோ பிழையாக வழிநடத்துவதற்கு நாம் நினைக்கவில்லை.

4.4 அரசாங்கப் படுகடன் முறையாக சமர்ப்பிக்கப்படாத சில முக்கிய பிரச்சினைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

அ. நாடு கடந்த பல வருடங்களின் போது செலவிட்ட நிகழத்தக்க பொறுப்புக்களை இப்பற்றாக்குறையில் எவ்வகையிலும் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 இன் இறுதியில் அரசாங்கம் திறைசேரி உத்தரவாதங்களாக அரச உடைமை தொழில்முயற்சிகளினால் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு வர்த்தக வங்கிகளுக்கு ரூபா 524 பில்லியன் பெறுமதியான திறைசேரி உத்தரவாதமாக வழங்கியுள்ளது. (பின்னிணைப்பு I) இந்த பொறுப்புக்கள் குறித்த அரச உடைமை தொழில்முயற்சிகளினால் செலுத்தப்படாத போது அரசாங்கம் அவற்றினை செலுத்த வேண்டியுள்ளது.

ஆ. 2014 இன் இறுதியிலுள்ளவாறு வங்கித்தொழில் முறைமைக்கு செலுத்தப்பட வேண்டிய படுகடன் தொகை ரூபா 593 பில்லியனாகக் காணப்பட்டது. இது ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஹெஜ்ஜிங் கொடுக்கல் வாங்கலின் ரூபா 7.8 பில்லியனை அல்லது 60 மில்லியன் ஐ.அ.டொலரினையும் உள்ளடக்கியுள்ளது. ஹெஜ்ஜிங் கொடுக்கல் வாங்கல் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ஏறக்குறைய 120 மில்லியன் ஐ.அ.டொலராக (ரூபா 15.7 பில்லியன்) இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது இலங்கையின் வர்த்தக தொழிற்பாடுகளின் வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மிக மோசமான கொடுக்கல் வாங்கல்களில் ஒன்றாக இருப்பதுடன் இறுதியில் இது மக்களின் பொருளாதாரத்தினை வெகுவாகப் பாதித்தது.

இ. அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது அரசாங்க உடைமைத் தொழில்முயற்சிகளினால் உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்காக பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கியிருக்கவில்லை. 2014 இன் இறுதியில் இவ்வாறு பெறப்பட்ட கடன்களின் மொத்த நிலுவை 2,356 மில்லியன் ஐ.அ.டொலராக அல்லது ரூபா 308 பில்லியனாகக் காணப்பட்டது. இக்கடன்கள் புத்தளம் நிலக்கரி மின் உற்பத்திக் கருத்திட்டம், ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையக் கருத்திட்டம் என்பவற்றிற்கு நிதியளிப்பதற்காக பெறப்பட்டது. (பின்னிணைப்பு II)

4.5 திறைசேரி உத்தரவாதங்கள், வங்கிகளுக்கான அரச தொழிற்முயற்சிகளின் படுகடன் மற்றும் அரச தொழில்முயற்சிகளினால் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுக்கான வெளிநாட்டு கடன் தொகை என்பவற்றை நாம் ஒன்று சேர்ப்போமாயின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது பிரசுரிக்கப்பட்ட இலக்கங்களைவிட மிகவும் அதிகமானதாக இருப்பதனைக் காண முடியும்.

4.6 தற்பொழுது நீங்கள் முன்னைய ஆட்சியில் எமக்கு விட்டுச் சென்ற வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் அளவினை அவதானிக்க முடியும். இது முன்னைய அரசாங்கத்தினால் விட்டுச் செல்லப்பட்ட ஆரோக்கியமற்ற ஒரு விடயமென்பதுடன் நாம் அவற்றை அனுபவிக்க வேண்டியுள்ளதுடன் அவ்விடத்திலிருந்து எமது பயணத்தினையும் ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

4.7 இன்னும் சில வருடங்களில் அவ்வாறான செயற்பாடுகளினால் பொருளாதார ரீதியில் தோல்வியடைந்த நாடொன்றாக எமது நாட்டினை முத்திரை பதிக்கின்ற அளவு நிலைமை ஏற்பட்டு விடும். இந்த ''மாற்றம்'' இனை சாத்தியப்படுத்திய அனைவருக்கும் நான் மீண்டும் நன்றி தெரிவிப்பதுடன் அவ்வாறு இடம் பெறாவிட்டால் எமது பெருமைக்குரிய தேசம் பேரளவான ஜனநாயகமாக மாறி பொருளாதாரமானது மோசமான ஆட்சியாளர்களினால் சூறையாடப்பட்டிருக்கும்.

4.8 தற்காலிக தரவுகளின் அடிப்படையில் 2014 இன் இறுதியில் அரசாங்கத்தின் படுகடன் நிலுவை ரூபா 7,373 பில்லியனாகக் காணப்பட்டது. இது தலைக்குரிய படுகடனை ரூபா 357,233 ஆக மாற்றியது.
எவ்வாறாயினும், நான் மேலே சுட்டிக்காட்டிய 3 விடயங்களையும் நாம் உள்ளடக்குவோமாயின் மொத்தப் படுகடன் ரூபா 8,817 பில்லியனாக அதிகரிக்கும். இயல்பாகவே தலைக்குரிய படுகடன் ஏறக்குறைய 427,220 ரூபாவாக அதிகரிக்கும். மீண்டும் முன்னைய அரசாங்கத்தினால் இந்நாட்டின் மக்கள் மீது சுமத்தப்பட்ட கடன் சுமையினை நீங்கள் நன்கு அவதானிக்க முடியும்.

4.9 இந்த அனைத்து படுகடன்களும் இந்நாட்டின் அப்பாவி மக்களினால் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் இச்சுமையினை தற்கால சந்ததியினர் மாத்திரமல்லாமல் எதிர்கால சந்ததியினரும் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்ற உண்மையினை நான் உங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். 2,500 வருடங்களுக்கு அதிகமான வரலாற்று சிறப்பம்சங்களைக் கொண்ட நாடு என்ற வகையில் நாம் பெருமைப்படுகின்ற அதேவேளை முன்னைய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த படுகடன் வரலாற்றினைக் கொண்டு நாம் எவ்வாறு பெருமையடைய முடியும். இது அத்தியாவசியமானதும் வெளிப்படையானதாகவும் இருந்ததா என்ற கேள்வியும் எம்மில் எழுகின்றது. முன்னைய ஆட்சியாளர்களினால் கையாளப்பட்ட பணக் கொடுக்கல் வாங்கல்கள் எதிர்கால சந்ததியினர் அவற்றினை மீளச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்ற வகையில் அவர்கள் வெட்கப்பட வேண்டியுள்ளனர்.

**மொத்தப் படுகடன் மற்றும் தலைக்குரிய படுகடன்**

| விடயம் | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|
| மொத்தப் படுகடன் (ரூபா பில்.) | | | |
| அரசாங்க படுகடன் | 6,000 | 6,793 | 7,373 |
| மொத்தப் படுகடன்: அரச படுகடன், திறைசேரி உத்தரவாதங்கள், அரச உடைமை நிறுவனங்களினால் வங்கிகள் மற்றும் வெளிநாட்டு மூலங்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் | 6,853 | 8,099 | 8,817 |
| மொத்த உ.உ.வீதத்தில் மொத்தப் படுகடன் (%) | | | |
| அரசாங்க படுகடன் | 79.2 | 78.3 | 74.4 |
| மொத்தப் படுகடன்: அரச படுகடன், திறைசேரி உத்தரவாதங்கள், அரச உடைமை நிறுவனங்களினால் வங்கிகள் மற்றும் வெளிநாட்டு மூலங்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் | 90.4 | 93.4 | 88.9 |
| தலைக்குரிய படுகடன் (ரூபா) | | | |
| அரசாங்க படுகடன் | 295,165 | 331,653 | 357,233 |
| மொத்தப் படுகடன்: அரச படுகடன், திறைசேரி உத்தரவாதங்கள், அரச உடைமை நிறுவனங்களினால் வங்கிகள் மற்றும் வெளிநாட்டு மூலங்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் | 337,140 | 395,379 | 427,220 |

4.10 மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமொன்றாக 2014 இன் இறுதியில் அரசாங்கத்தின் மொத்தப் படுகடன் ஏறக்குறைய 74 சதவீதமாக இருத்தல் வேண்டும். இந்த படுகடன் மட்டமானது சர்வதேச தராதரங்களின் அடிப்படையில் அதிகமாகும். நான் மேலே குறிப்பிட்ட 3 விடயங்களுடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான மொத்தப் படுகடன் விகிதம் 88.9 சதவீதமாக மேலும் அதிகரிக்கும்.

4.11 முன்னைய அரசாங்கத்தின் கீழ் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் பெரும்பாலான ஒதுக்கீடுகள் பிரதானமாக ஒருசிலதே உறுதிப்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், 2015 ஆம் நிதியாண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு நாம் மேற்கொண்ட திருத்தங்களில் அவற்றினை சீர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

4.12 வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் நாட்டின் நிலுவையான படுகடனை குறைப்பதற்கும் உறுதியானதும் புத்தாக்க நடவடிக்கைகளையும் நாம் எடுக்க வேண்டியுள்ளது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

4.13 எமது புதிய முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு முன்னர் இரண்டு பிரதான விடயங்களை குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். பொருளாதார வளர்ச்சி மற்றும் பெயரளவு வேதனங்கள் அத்துடன் படுகடன் மீள் கொடுப்பனவு சுமை

**05. பொருளாதார வளர்ச்சி மற்றும் பெயரளவு வேதனங்கள்**

5.1 தற்பொழுது வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரங்களில் ஒப்பீட்டு ரீதியில் இலங்கை உயர் பொருளாதார வளர்ச்சி கொண்ட பொருளாதாரமொன்றாகவும் குறைந்த பணவீக்க மற்றும் வேலையின்மை மட்டங்களை உடைய பண்புகளைக் கொண்ட நாடாகவும் இனங் காணப்பட்டுள்ளதனை நாம் அறிவோம்.

5.2 ஆசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகள் முன்னேற்றமடைவதற்கான பல்வேறுபட்ட வாய்ப்புக்களை இந்நாடு பெற்றுக் கொடுத்ததோடு உலகத்தில் பிரதான பொருளாதார நாடுகளாகக் கருதப்படும் மேற்கத்தேய நாடுகளையும் பின்தள்ளி உலகின் பொருளாதாரங்களாக முன்னேறுவதற்கு வாய்ப்பினைப் அளித்தது. சீனா மற்றும் இந்தியாவினால் ஏற்படுத்தப்பட்ட பாரிய பாய்ச்சலானது ஆசிய நாடுகள் முன்னேற்றமடைவதற்கான திறனை உலகிற்கு காட்டியுள்ளதுடன் இலங்கை ஆசியப் பிராந்தியத்தில் அதிகூடிய 90 சதவீதத்திற்கு அதிகமான எழுத்தறிவு வீதத்தினைக் கொண்ட நாடு என்ற வகையில் எமது ஆற்றல்களினை அடிப்படையாகக் கொண்டு நாம் சிறந்த இடத்தினை அடைந்துள்ளோமா என விமர்சன ரீதியாக நோக்க வேண்டியுள்ளது.

பெருந்தெருக்கள், விமான நிலைய மற்றும் துறைமுகங்கள், பாரிய கட்டிடங்கள் என்பன மாத்திரம் நிலையானதாகவும் ஸ்திரத்தன்மைக்கும் காரணமாக இருக்க மாட்டாது. விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் கைத்தொழில் தொடர்பான ஏற்றுமதிகளின் நிலைமை என்ன?

பொதுவாக முழுமையான அபிவிருத்தி திட்டத்திற்குள் பாதை வலையமைப்பு மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு தேவைப்பாடுகளுக்கான ஏற்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும். இங்கு அவ்வாறான முழுமையான அபிவிருத்தித் திட்டங்கள் காணப்படாததுடன் நாட்டின் பொருளாதாரத்தினை சீரழிக்கின்ற சிலரின் விருப்பு

வெறுப்புக்களுக்கு ஏற்றாற்போல் எழுமாறான கருத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட சில நகரங்களை மெருகூட்டி அழகுபடுத்தல் மற்றும் அரசியல் ரீதியான பின்னணிகளினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியில் கவனம் செலுத்தியமை பொருளாதாரத்தினை நலிவடையச் செய்துள்ளதுடன் அது பொருளாதார மீட்சிக்கான மாற்று வழிகளுக்கு அப்பாலும் சென்றுள்ளது.

5.3 இலங்கையின் வருடாந்த உண்மைப் பொருளாதார வளர்ச்சி கடந்த 3 வருடங்களின் போது ஏறக்குறைய 7 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேளை இதே காலப்பகுதியில் பெயரளவில் வருடாந்தம் 15 சதவீதமாக வளர்ச்சி அடைந்தது.
இது தலைக்குரிய வருமானத்தில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சிக்கு காரணமாக அமைந்ததுடன் 2014 இல் ஏறக்குறைய 3,646 ஐ.அ.டொலராக அல்லது 477,600 ரூபாவாக மதிப்பிடப்பட்டிருந்ததுடன் சர்வதேச வகுப்பாக்கங்களுக்கமைவாக இது நடுத்தர வருமான பொருளாதார மட்டங்களுடன் ஒப்பிடக் கூடியதாகவிருந்தது.

5.4 எவ்வாறாயினும், பெயரளவில் காணப்பட்ட தேசிய வருமான வளர்ச்சி ஒவ்வொரு பிரசையினதும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதாகக் காணப்படவில்லை. சாதாரண ஒரு பிரசையினை அவர் தலைக்குரிய வருமானம் அதிகரித்து சுபீட்ச நிலையினை அடைந்துள்ளாரா எனப் பார்த்தல் வேண்டும். அவ்வாறின்றேல் அங்கு ஏதோ தவறு இடம் பெற்றுள்ளது. எமது மாண்புமிகு பிரதமர் அடிக்கடி குறிப்பிடுவது போல சிலர் தமது சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி நன்மையடையாமல் அனைத்துப் பிரசைகளும் நன்மையடையும் வகையில் பொருளாதாரத்தினை உருவாக்குதல் வேண்டும். ஒரு சில குடும்பங்கள் மாத்திரம் சுபீட்சம் அடைவதன் மூலம் எமது நாட்டின் பங்காளிகளான அனைத்துப் பிரசைகளும் நன்மையடைவர் என நாம் நம்பவில்லை.

5.5 ஏனையவைகளைவிட குறைந்த மட்டத்தில் சில பெயரளவிலான வேதனங்கள் அதிகரித்துள்ளன. கடந்த இரண்டு வருடங்களின் போது சராசரியாக 10 சதவீதத்திற்கு குறைவான அதிகரிப்பு அரசாங்கத்துறை பெயரளவு வேதனத்தில் ஏற்பட்டுள்ளதுடன் பணவீக்கத்துடன் திருத்தப்படும் பொழுது உண்மையான வேதனத்தில் வருடாந்த வளர்ச்சியானது ஏறக்குறைய 5 சதவீதமாகும். இது குடும்பங்களினது கொள்வனவு ஆற்றலினை மேம்படுத்துவதற்கு போதியதாக இருக்காது. மேலும், உண்மையான வேதனம் ஊழியச் சந்தையில் சில துண்டங்களை பாதித்து விடக்கூடும்.

5.6 இந்நிலைமையானது, வேதன மட்டம் மற்றும் விலை மட்டம் ஆகிய இரண்டிலும் சில திருத்தங்களை வேண்டி நிற்கின்றது. 100 நாள் புரட்சி நிகழ்ச்சித் திட்டத்திற்குள் மாதமொன்றுக்கு 10,000 ரூபாவாக சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதுடன் அதில் 5,000 ரூபா 2015 பெப்ரவரி மாதத்திலிருந்து அதிகரிக்கப்படுவதுடன் 2015 யூன் மாதத்தில் மீதி அதிகரிக்கப்படும். அரசாங்க ஊழியர்களின் பெயரளவிலான வேதன வளர்ச்சியானது 2014 உடன் ஒப்பிடுகையில் 2015 இல் ஏறக்குறைய 47 சதவீதத்தினால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. குறைந்த பணவீக்க நிலைமையில் உண்மையான வேதன வளர்ச்சியும் காணப்பட்ட முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2015 இல் 40 சதவீதமாக அதிகரிக்கும்.

5.7 இனங் காணப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைக் குறைப்புடன் அனைத்து குடும்பங்களினதும் உண்மையான வருமானத்தினை அதிகரிக்கச் செய்வதில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும். இந்த வகையில் அனைத்து இலங்கையர்கள் அனைவருக்குமான எதிர்கால முன்னேற்றம் நல்லாட்சி மற்றும் சமவாய்ப்பு என்ற வேலைச் சட்டகத்திற்குள் உறுதி செய்யப்படும்.

**06. கடன் மீள் கொடுப்பனவு சுமை**

6.1 படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளில் பாரிய அழுத்தமொன்றினை உருவாக்குகின்றது என்பதனை நாம் நன்கறிவோம். 2015 இல் மாத்திரம், வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 425 பில்லியனாகவும் படுகடன் மீள் கொடுப்பனவு ரூபா 840 பில்லியனாகவும் ஆக மொத்த படுகடன் சேவை ரூபா 1,265 பில்லியனாகும்.

6.2 2015 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இது வருமானத்தில் ஏறக்குறைய 77 சதவீதமாக இது காணப்படும். இது பொதுமக்களுக்கான பல்வேறு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு வரவு செலவுத்திட்டத்தில் காணப்படும் இடப்பாட்டினை குறிப்பிடத்தக்களவு வரையறுத்துள்ளது. படுகடன் மீள் கொடுப்பனவு தொடர்பில் பின்வருவனவற்றை எடுத்துக் காட்டுவதற்கு நான் விரும்புகின்றேன்.

அ. 2015 இல் இருதரப்பு, பல்தரப்பு நிறுவனங்களுக்கான படுகடன் மீள் கொடுப்பனவு அதேபோன்று வர்த்தக கடன் பெறுகைகள் மற்றும் ஏற்றுமதிக் கடன் என்பன 1,394 மில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்படும். இந்த மூலங்களுடன் தொடர்பான மொத்தப் படுகடன் மீள் கொடுப்பனவுகள் அடுத்த 5 வருடங்களில் ஏறக்குறைய 8,461 மில்லியன் ஐ.அ.டொலராகக் காணப்படும். இது 2014 இன் இறுதியில் காணப்பட்ட 5,000 மில்லியன் ஐ.அ.டொலர் சர்வதேச நாணயமுறிகளுக்கான மீள் கொடுப்பனவினையும் உள்ளடக்குகிறது. இத்தொகையானது 2015 – 2020 காலப்பகுதியின் போது முதிர்ச்சியடைகின்றது.

ஆ. திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்களில் வெளிநாட்டு முதலீடுகள் படிப்படியாக குறைவடைவதுடன் சர்வதேச மூலதனச் சந்தையில் ஏற்பட்டு வரும் சாதக நிலைமை காரணமாக அரசாங்க முறிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு முதலீடுகளானது முதிர்வு காலத்திற்கு முன்பே விற்பனை செய்யப்படலாம்.

இ. பாரியளவிலான கருத்திட்டங்களுக்காக அண்மையில் பெறப்பட்ட கடன்களில் பெரும்பாலானவற்றின் மீள் கொடுப்பனவுகள் சராசரி 3 – 4 வருட சலுகைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் இவ்வாண்டிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஈ. பாதுகாப்பு தொடர்பான கடன்களுக்காக வழங்குநர்களுக்கு 15 மில்லியன் ஐ.அ.டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. மேலும், இதுவரை எமக்கு சரியான அளவு தெரியாத ஹெஜ்ஜிங் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

6.3 தற்பொழுது காணப்படுகின்ற நீண்டகால படுகடன் மீள் கொடுப்பனவுகளுடன் இக்கடன்களின் மீள் கொடுப்பனவானது எதிர்வருகின்ற வருடங்களின் போது வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சலினை பாரியளவில் அதிகரிக்கும். இந்த வகையில், குறுகிய காலத்தில் படுகடன் மீள் கொடுப்பனவு தேவைப்பாடுகளை ஈடுசெய்கின்ற சுமையானது சர்வதேச ஒதுக்குகளின் அளவைக் குறைவடையச் செய்யும். கடந்த சில வருடங்களில் செலுத்தப்பட்ட வெளிநாட்டு கடன்களுக்கான வட்டி விகிதங்கள் பின்னிணைப்பு III இல் காட்டப்பட்டுள்ளது.

6.4 இன்று நாம் ஒரு நாடு என்ற வகையில் எப்படி நலிவான நிலையில் காணப்படுகின்றது என்பதனையும் மற்றும் நாட்டின் மோசமான பொருளாதார நிலையையும் இது படம் பிடித்துக் காட்டுகின்றது. இந்த வகையில் ஏற்றுமதி வருமானங்களை அதிகரிப்பதற்கான உறுதியான தேவைப்பாடு காணப்படுவதுடன் அரசிறைத் தொழிற்பாடுகளில் அழுத்தத்தினை ஏற்படுத்தக் கூடிய அதேபோன்று வெளிநாட்டுத் துறையில் ஸ்திரநிலையினை ஏற்படுத்துகின்ற நீண்டகால கடப்பாடுகளுடன் குறுகிய கால கடன்கள் குறைக்கப்பட வேண்டியுள்ளது.

## 07. செலவின முன்மொழிவுகள்

7.1 இன்று சமர்ப்பிக்கப்படும் இடைக்கால வரவு செலவுத்திட்டம் ''100 நாள் புரட்சி'' இன் மிக முக்கிய பணிகளிலொன்றாகக் காணப்படுகின்றது. என்னைப் பொறுத்தவரை இதனை நான் ''100 நாள் சவால்'' என அழைக்கின்றேன். தேர்தல் பிரசாரத்தின்போது வாக்களிக்கப்பட்ட ''100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின்'' உள்ளடக்கத்தினையும் விஞ்சிய அளவில் நாம் இலங்கை மக்களின் நன்மைக்காக வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

7.2 படுகடன் சுமையினை அதிகரிக்காத வகையில் உறுதிப்படுத்தக் கூடிய போதிய வருமான முன்மொழிவுகளுடன் வெளிப்பாய்ச்சல்கள் இணக்கம் காணப்படுதல் வேண்டும். ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் அதிகரித்த செலவானது ஆட்சியாளர்களின் கௌரவத்தை கட்டியெழுப்புவதுடன் அநாவசியமான செலவுகளையும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இது இவ்வறிக்கையை தயாரிக்கும் குழுவின் வாழ்க்கையை இலகுபடுத்தியது.

7.3 கௌரவ சபாநாயகர் அவர்களே, பாராளுமன்ற உறுப்பினர்களே அதிகரித்த வாழ்க்கைச் செலவினால் கடந்த தசாப்தங்களின் போது சொல்லொணா துன்பங்களை அனுபவித்த இலங்கை மக்கள் ஆச்சரியமிக்க சந்தோசமொன்றினை அனுபவிக்கவுள்ளனர். நாம் சமூகத்திலுள்ள வறிய மக்களின் சுமையினை இலகுபடுத்துவது தொடர்பில் சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அவர்களும் எமது நாட்டின் பங்காளிகளே. தேசத்தைக் கட்டியெழுப்புவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வசதி படைத்தவர்கள் மற்றும் மிகவும் செல்வந்தர்கள் மேற்கொள்வதற்கான காலம் வந்துள்ளது. முன்னைய ஆட்சியில் சில தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் சாதாரண அளவைவிட கூடிய சலுகைகளை பெற்றுள்ளதுடன் மிதமிஞ்சிய இலாபங்களையும் பெற்றுள்ளமை நாம் நன்கறிவோம்.

7.4 ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டவாறு முன்னைய ஆட்சியில் காணப்பட்ட 60 அமைச்சுக்கள் 31 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையினால் மாத்திரம் வருடத்திற்கு ஏறக்குறைய ரூபா 1,500 மில்லியனை சேமிக்க முடியுமென்பதுடன் அவற்றினை மேலும் வினைத்திறனான உற்பத்தி நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியும்.

7.5 முன்னைய ஆட்சியாளர்களால் வளங்கள் அரசியல் நோக்கங்களுக்காக குறிப்பிடத்தக்களவு வீணடிக்கப்பட்டுள்ளன. இதுதான் அவர்களுக்கும் இந்நாட்டின் மக்களது நலனை கருத்திற் கொண்ட எமக்கும் இடையிலான வேறுபாடாகும்.

**அரசாங்கத்துறை சம்பளத் திருத்தம்**

7.6 ''100 நாள் புரட்சி'' இல் எமது பிரதான முன்மொழிவுகளில் ஒன்றினை நான் இங்கு குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். இந்நாட்டிலுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு மாதச் சம்பளத்தினை ரூபா 10,000 இனால் அதிகரிப்பதாக நாம் வாக்களித்திருந்தோம். ஆரம்பமாக 2015 பெப்ரவரியில் ரூபா 5,000 வழங்கப்படும்.

7.7 ஏறக்குறைய 1.3 மில்லியனுக்கு அதிகமான நிரந்தர பதவி வகிக்கும் அரசாங்க ஊழியர்கள் இவ்வருடம் சனவரியில் அவர்கள் பெற்றுக் கொண்ட சம்பளத்தினைவிட 5,000 ரூபாவினை அதிகமாகப் பெறவிருக்கின்றனர் என்பதனை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இன்று மக்கள் முகம் கொடுக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பாரியதொரு நிவாரணமாக இது இருக்குமென்பதனை நான் அறிவேன்.

7.8 கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த சம்பளத் திருத்தமானது இலங்கை வரலாற்றில் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஆகக் கூடிய சம்பள அதிகரிப்பாக பதியப்படும். எமது நாட்டின் நிர்வாகத்தில் பங்களிக்கின்ற அரசாங்க ஊழியர்களுக்கான இந்த சம்பள அதிகரிப்பினை முன்மொழிகின்ற சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இது 2015 இல் ரூபா 86,500 மில்லியன்களை செலவினமாகக் கொண்டிருக்கும்.

7.9 ஆசியப் பிராந்தியத்தில் காணப்படுகின்ற தராதரங்களுக்கேற்ப உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு தொழிற்சங்கங்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் அரசாங்கத்துறையின் பங்காளிகள் அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்.

**தனியார் துறை வேதனங்களும் சம்பளங்களும்**

7.10 இணக்கப்பாடுகளை உறுதிப்படுத்துவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தில் அரசாங்கத்திற்கு உதவுவதற்கு அனைத்து தனியார் துறை தொழில் வழங்குனர்கள் அனைவரையும் நான் வினயமாக கேட்டுக் கொள்கின்றேன். அத்தகைய சாதகமான முயற்சியானது உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையில் காணப்படும் இடைவெளியினை குறைப்பதுடன் இல்லாதாக்கும் என்பதனை நான் உறுதியாக நம்புகிறேன். மனித மூலதனம் என்பது மிக முக்கிய சாதனம் என்பதுடன் உங்களது கம்பனியில் சிறந்த ஆதனமொன்றாகும். எனவே, உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு உதவுவதுடன் மகிழ்ச்சிகரமான வேலைத்தள சூழலொன்றினை உருவாக்குவதற்கு உதவுகின்ற ஊழியப்படையொன்றினை பேணுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

7.11 விசேடமாக எரிபொருட்களின் செலவுக் குறைப்பினூடாக உள்ளீட்டுச் செலவுகளில் ஏற்படும் சேமிப்பினைக் கருத்திற் கொண்டு உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் ஊழியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,500 இனை சம்பள அதிகரிப்பாக வழங்குவதற்கு கவனம் செலுத்துமாறு தனியார் துறையினை கேட்டுக் கொள்கின்றேன். எவ்வாறாயினும், தொழில் கொள்வோர் இம்முன்மொழியப்பட்ட அதிகரிப்பின் ஒரு பகுதியாக உணவைப் பெற்றுக் கொடுப்பதற்கான செலவு போன்ற காசல்லா நன்மைகளினூடாக உருவாகும் ஏதாவது பெறுமதியினையும் உபயோகிக்கலாம். தனியார் துறை ஊழியர்களினால் வழங்கப்படுகின்ற பங்களிப்புகளையும் நினைவு கூருவதோடு தொழில் வழங்குனர்களும் சாதகமான வருமானத்தினை பெறும் வகையில் தனியார் துறை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். வளர்ச்சியின் முக்கிய காலப்பகுதி என்ற வகையில் நாட்டிலுள்ள தனியார் துறையினர் தமது நிறுவனங்களின் அச்சாணியாகக் காணப்படுகின்ற மனிதவளத்தினை முன்னேற்றுவதற்கான சிறந்ததொரு சந்தர்ப்பமாகும்.

7.12 இப்பிராந்தியங்களானது புதிய அரசாங்கத்தினால் மீண்டும் GSP + வசதியினை மீள் பெற்றுக் கொள்வதற்கான முன்னெடுப்புகளின் மூலம் கிடைக்கும் நன்மையினை பெற்றுக் கொள்ளும். மாண்புமிகு பிரதமர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் இவ்விடயம் தொடர்பாக மிக ஆர்வத்துடன் முயற்சித்துக் கொண்டுள்ளனர் என்பதனை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நாடு இந்த சலுகையின் மூலம் பல வருடங்கள் நன்மையினை அனுபவித்ததுடன் நாட்டின் கைத்தொழில் ஏற்றுமதிக்கு சந்தேகமின்றி உதவி புரிந்துள்ளது. துரதிஷ்டவசமாக கடந்த அரசாங்கம் இதனை சாதகமாக நோக்காததுடன் நாடு என்ற வகையில் நாம் அதன் மூலம் பல இழப்புக்களை சந்தித்தோம்.

7.13 இந்த வசதி இழக்கப்பட்டதனால் கடந்த 7 வருடங்களில் ஏறக்குறைய 5,000 மில்லியன் ஐ.அ.டொலர் நட்டமேற்பட்டது. அது மாத்திரமன்றி இதனால் இழக்கப்பட்ட வேலைவாய்ப்புக்கள் எண்ணிலடங்காதவை. இன்றும் பலர் இவ்வசதி நீக்கப்பட்டதன் காரணமாக அவர்களது தொழில்களை இழந்து கஸ்டப்படுகின்றனர். இதன் மூலம் தொழிலும் வருமானமும் இழக்கப்பட்டு வறுமைக்கு தள்ளப்பட்டனர்.

7.14 இது ஏற்றுமதித் துறையில் மிக மோசமான பின்னடைவுக்கு காரணமானதுடன் வர்த்தக மீதி, சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டு ஒதுக்கம் என்பவற்றில் கடுமையான தாக்கங்களைச் செலுத்தியது.

7.15 GSP+ வசதியினை புதுப்பிப்பதன் மூலம் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதுடன் மற்றும் கடந்த பல வருடங்களாக மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளை மீள ஆரம்பிப்பதும் எமது திட்டமாகும். இதன் மூலம் தனியார் துறையினர் பாரியதொரு வளர்ச்சியை பெற்றுக் கொள்வர்.

7.16 கௌரவ சபாநாயகர் அவர்களே, இச்சந்தர்ப்பத்தில் ஐரோப்பிய ஒன்றியமானது இலங்கையிலிருந்து மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்வதை இடைநிறுத்தியுள்ளது. இது 2015 ஜனவரி 15 இலிருந்து அமுலுக்கு வந்துள்ளது.

7.17 அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியமானது சர்வதேச கடல்சார் சட்ட கடப்பாடுகளைச் செயற்படுத்தல் மற்றும் செயற்திறனான மீன்பிடிப்படகு கண்காணிப்பு முறைமையொன்றை செயற்படுத்துதல் மற்றும் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளுக்கு தடையினை விதித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை அமுலுக்கு வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு மேற்கூறப்பட்ட விடயங்களை மீளாய்வு செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருந்த போதிலும் முன்னைய அரசாங்கம் இவ்விடயத்தினை பொருட்டாக கொள்ளாததுடன் இது தொடர்பில் எவ்விதமான பயன்மிக்க நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

7.18 எவ்வாறாயினும், இது முக்கிய விடயமொன்று என்ற வகையில் குறிப்பாக எமது மீனவ சமூகத்தினர் மற்றும் மீன் ஏற்றுமதியாளர்களுடன் தொடர்புபட்டது என்ற வகையில் இத்தடையினை நீக்குவதற்கு பொறுப்பான அரசாங்கமென்ற வகையில் இத்தடையை நீக்கி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு மீன் ஏற்றுமதியை மீள் தொடருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கின்றது. இது வெற்றியளிக்கும் பட்சத்தில் தனியார் துறையினருக்கு பின்தங்கிய பிராந்தியங்களில் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு பல புதிய சந்தர்ப்பங்களை அளிக்கும்.

**ஓய்வூதியத் திருத்தங்கள்**

7.19 எமது தாய் நாட்டின் இளைப்பாறிய அரசாங்க ஊழியர்கள் நாட்டின் நலனுக்காக பாரியளவு பங்களிப்பு செய்துள்ளதுடன் அவர்களது இளைப்பாறல் காலத்தில் இந்த திருத்தத்தினை வழங்குவது மிகவும் பொருத்தமானதாகும்.

7.20 இந்த வகையில் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கான ஓய்வூதியத் தொகையினை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். அவர்களின் நலனில் நாம் அக்கறையோடு இருப்பதனைக் கருத்திற் கொண்டு 2015 ஏப்ரல் மாதத்திலிருந்து மாதாந்த ஓய்வூதியத் தொகையினை மேலதிகமாக 1,000 ரூபாவினால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்த ஓய்வூதிய ஏறக்குறைய 550,000 ஓய்வூதியம் பெறுநர்கள் நன்மையடைவதுடன் இம்முன்மொழிவுக்காக நாம் ரூபா 4,900 மில்லியனை மேலதிகமாக செலவிட வேண்டியுள்ளது.

**சமூர்த்தி நலன்புரி திட்டம் - சமூர்த்தி கொடுப்பனவுகளை அதிகரித்தல்**

7.21 சமூர்த்தி திட்டமானது ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து சமூர்த்தி பயனாளிகளுக்கு முறையான திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவில்லை. சமூகத்திலுள்ள தேவையுடைய துறையினரை இனங் காண்பதற்கான முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான நிர்வாக செலவினமான வருடமொன்றிற்கு ரூபா 10 பில்லியனுக்கு அதிகமான செலவினைக் குறைத்து மிகவும் பயனுறுதிவாய்ந்த முறையில் எதிர்கால சமூர்த்திக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

7.22 100 நாள் புரட்சி நிகழ்ச்சித்திட்டத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டவாறு 2015 ஏப்ரல் மாதத்திலிருந்து 200 சதவீத அதிகரிப்பு வழங்கப்படும்.

7.23 கிராமியப் பிரதேசங்களில் நிதி கிடைப்பனவினை அதிகரிக்கும் நோக்கத்துடன் சமூர்த்தி /திவிநெகும வங்கிகள் பிராந்திய அபிவிருத்தி வங்கியுடன் ஒருங்கிணைப்புச் செய்யப்படும்.

**சிரேஷ்ட பிரசைகளின் நிலையான வைப்புக்களுக்கான சலுகை வட்டி வீதங்கள்**

7.24 இந்த நாட்டிலுள்ள சிரேஷ்ட பிரசைகளுக்கு வழங்கப்படுகின்ற குறைந்த வட்டி விகிதங்கள் மோசமான பாதிப்பினை ஏற்படுத்தியிருப்பதனை நாம் அறிவோம். குறிப்பிடத்தக்களவு சிரேஷ்ட பிரசைகள் அவர்களது வைப்புக்களின் மீது பெறப்படும் மாதாந்த வட்டி வருமானத்தின் மூலம் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. அவர்கள் மீது நாம் கூடிய அக்கறை கொண்டுள்ளோம் என்ற வகையில் "100 நாள் புரட்சி" இன் கீழ் அவர்களது நிலையான வைப்புகளுக்கான வட்டி விகிதங்களை அதிகரிப்பதற்கான முயற்சிகளை நாம் எடுத்துள்ளோம்.

7.25 வர்த்தக வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ஆகக் கூடியது ரூபா 1 மில்லியன் வரைக்குமான சிரேஷ்ட பிரசைகளின் சேமிப்புக்களுக்காக 15 சதவீத உயர்ந்த வட்டி வருமானம் வழங்கப்படும் என்பதனை நான் தெரிவிப்பதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஆரோக்கியமான தாய்மை – சுகாதார நலன்பேண் உதவி**

7.26 போஷாக்குமிக்க ஆரோக்கிய சமூகம் என்பது நாடொன்றின் சொத்தாக இருப்பதுடன் விசேடமாக தாய்மையுடன் தொடர்பான விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், குறைந்த வருமானம் பெறுகின்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கிடையிலான போஷாக்கு மட்டம் நாட்டிலுள்ள நடுத்தர வகுப்பினரினைவிட குறைவாகக் காணப்படுகின்றது.

7.27 இவர்களுக்கான உதவி இலத்திரனியல் வங்கி அட்டைகளின் மூலம் வழங்கப்படுவதுடன் இரண்டு வருட காலப்பகுதிக்கு இம்மானியம் வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்பட்ட நிதி குறித்த நோக்கத்திற்காக பயன்படுகின்றதா என்பதனை குறித்த காலப்பகுதிக்குள் உறுதிப்படுத்தப்படும். புதிதாகப் பிறந்த குழந்தை மற்றும் தாய்மாரின் நலனைக் கருத்திற் கொண்டு வழங்கப்படுகின்ற மானியத்தின் மூலம் எதிர்பார்க்கின்ற அனைத்து நன்மைகளையும் அவர்கள் பெறுகின்றனரா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு தமது உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டல்களையும் உதவியினையும் வழங்குவதற்கு கௌரவ சிறுவர் பராமரிப்பு அமைச்சரின் உதவியினை நாம் எதிர்பார்க்கின்றோம்.

7.28 குறித்த தாய்மார் பிரசவிக்கும் குழந்தைகள் ஆரோக்கியமானவையாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு "100 நாள் புரட்சி" இன் கீழ் அவர்களுக்கான போஷாக்குணவுகளை வழங்குவதற்காக ஒவ்வொரு கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் ரூபா 20,000 கொடுப்பனவாக வழங்குவதற்கு நாம் உத்தரவாதமளிக்கின்றோம். இதற்காக வருடமொன்றிற்கு ரூபா 2,000 மில்லியனை செலவிட வேண்டியுள்ளது.

7.29 குறித்த 20,000 ரூபாவினை துஷ்பிரயோகம் செய்யாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு நிதியினைப் பயன்படுத்துகின்ற முறையொன்று சுற்றுநிரூபமொன்றின் மூலம் தெளிவுபடுத்தப்படும்.

**விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை இரத்துச் செய்தல்**

7.30 எமது நாடு விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டது என்ற வகையில் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் விவசாயிகளின் பங்களிப்பினை நாம் மறந்துவிட முடியாது. அவர்கள் தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தமது பெறுமதியான சொத்துக்களை அடகு வைப்பதன் மூலம் வங்கிகளிலிருந்தும் ஏனைய வழிகளின் மூலமும் கடன் பெறுவதனை எம்மால் அறிந்து கொள்ள முடியும். அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின் விளைவாக தமது பயிர்கள் அழிவடைந்ததனால் அவர்கள் பல்வேறு கஸ்டங்களை எதிர்நோக்கியதனை நாம் நன்கறிவோம். இந்நிலையில் அவர்களில் பெரும்பாலானோர் வங்கிகளுக்கான கடன்களை மீள் கொடுப்பனவு செய்வதற்கு முடியாது காணப்படுகின்றனர்.

7.31 வங்கிகளுக்கு தமது கடன்களை மீளச் செலுத்துவதற்கு முடியாதுள்ள இவ்விவசாயிகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தியுள்ளோம். இதனால் ‘‘100 நாள் புரட்சி’’ இன் கீழ் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு நாம் மும்மொழிகின்றோம். தற்பொழுது வர்த்தக வங்கிகளிலிருந்து விவசாயிகளுக்கு கடனாக வழங்கப்பட்ட ஆகக் கூடிய கடன் மூலதனம் 100,000 ரூபாவில் தற்பொழுது நிலுவையாக இருக்கும் தொகையில் 50 சதவீத விலைக்களிப்பினை நிவாரணமாக வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்கான செலவினம் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் ரூபா 2,500 மில்லியனாகும்.

**விவசாயப் பொருளாதாரத்தினை விருத்தி செய்வதற்கான உத்தரவாத விலைகள்**

7.32 விவசாயிகளுக்கு மேலும் ஊக்குவிப்பு வழங்கும் பிரதான நடவடிக்கையொன்றாக தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கான உத்தரவாத விலை நிர்ணயம் கவனத்திற் கொள்ளப்படும். இத்துறையில் ஈடுபடுபவர்களின் நிச்சயமற்ற தன்மையினை இது குறைக்கும். இதற்கமைவாக, பின்வரும் உத்தரவாத விலைக் கட்டமைப்பு செயற்படுத்தப்படும்.

அ. ஒரு கிலோ கிராம் நெல் கொள்வனவுக்கான உத்தரவாத விலை 50 ரூபாவாக அதிகரிக்கப்படும். இது 2015 பெரும்போகத்திலிருந்து ஆரம்பிக்கப்படுவதோடு நெல்லின் வகை, கொண்டுள்ள ஈரப்பதன் மற்றும் தரம் என்பவற்றின் அடிப்படையில் நெல்லானது தரம் பிரிக்கப்படும். ஊழல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றினை தவிர்ப்பதற்கு கடுமையான கொள்வனவு நடைமுறைகள் அமுல்படுத்தப்படுவது அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

ஆ. ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்கு கொள்வனவுக்கான உத்தரவாத விலை 80 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

இ. ஒரு கிலோ கிராம் தேயிலை கொள்வனவுக்கான உத்தரவாத விலை 80 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

ஈ. ஒரு கிலோ கிராம் இறப்பர் கொள்வனவுக்கான உத்தரவாத விலை 350 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

இறப்பர் மற்றும் தேயிலை என்பவற்றிற்கான உத்தரவாத விலைகள் இத்துறையில் குறுகிய காலத்திற்குள் மேற்கொள்ளப்படும் முழுமையான மதிப்பீடொன்றின் அடிப்படையில் செயற்படுத்தப்படும். உத்தேச உத்தரவாத கொள்வனவு விலைகளை அறிமுகம் செய்வதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றினை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

**சலுகை விலைகளில் கையினால் இயக்கப்படும் உழவு இயந்திரங்கள்**

7.33 விவசாய துறையினை தரமுயர்த்துவதற்கான முயற்சிகளிலொன்றாக விவசாய சமூகத்தினரின் பாவனைக்கு கையினால் இயக்கப்படும் உழவு இயந்திரங்களின் விலைகளை குறைப்பதற்கு எமது அரசாங்கத்தினால் உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சாத்தியமான விலைகளை கவனத்திற் கொண்டு தற்போதைய வரி மற்றும் ஏனைய செலவின விடயங்கள் தொடர்பில் முழுமையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படும். விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கப்படுகின்ற கையினால் இயக்கப்படும் உழவு இயந்திரங்கள் அவர்களை செயற்திறன் மிக்கவர்களாக மாற்றும் அதேவேளை விவசாய பொறிமுறை கண்ணோட்டத்தினையும் ஊக்குவிக்கின்றது.

7.34 உர மானியம் தொடர்ந்து வழங்கப்படும் என்பதை தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எவ்வாறாயினும், உரத்தின் தரம் சர்வதேச தராதரங்களை அடைந்து கொள்ளும் வகையில் தரமுயர்த்தப்படுதல் வேண்டும். சிறுநீரக நோய்க்கு பங்களிப்புச் செய்த முன்னைய அரசாங்கத்தைப் போலல்லாது நாம் சமூக பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டும்.

7.35 விவசாய சமூகத்திற்கு சிறந்த தொழில்நுட்பத்தினை வழங்குவதற்கும் தேவையான நிதியினை ஏற்பாடு செய்வதற்கும் விவசாய சமூகத்துடனும் உரிய கூட்டுறவு சங்கங்களுடனும் நாம் கலந்தாலோசனை செய்யவுள்ளோம்.

7.36 எமது சனாதிபதி மாண்புமிகு மைத்ரிபால சிறிசேன அவர்கள் விவசாய சமூகத்தினை சேர்ந்தவர் என்ற வகையில் இந்த அபிவிருத்திகளை முன்நின்று செயற்படுத்தவுள்ளார். இலங்கையின் விவசாய சமூகம் தற்பொழுது நிம்மதி பெருமூச்சினை விட்டிருப்பதுடன் தேசியப் பொருளாதாரத்தினை தூக்கி நிறுத்துவதற்கான பாரிய பங்களிப்பினை வழங்குவதற்கான சிறந்த சந்தர்ப்பமாகவும் கருதப்படுகின்றது.

**பாற்பண்ணை கைத்தொழில் அபிவிருத்தி – பாலுக்கான உத்தரவாத விலை**

7.37 தற்பொழுது லீற்றரொன்று 60 ரூபாவாகக் காணப்படும் பசும் பால் கொள்வனவு உத்தரவாத விலையினை 10 ரூபாவினால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிவதுடன் இதன் மூலம் பால் உற்பத்தி அதிகரித்து பாற்பண்ணையாளர்களின் வருமான மட்டமும் அதிகரிக்கும். இது 2015 யூலை 1 ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும்.

**இளைஞர் பாராளுமன்றத்தினை வலுவூட்டல்**

7.38 இளைஞர் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக இளைஞர் பாராளுமன்றத்திற்கு நிதியளிக்கப்படும். இந்நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில் 2015 இல் ரூபா 250 மில்லியன் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.

**விருப்பத்திற்கு மாறாக இடம் பெயர்க்கப்பட்ட கொழும்பு நகர குடியிருப்பாளர்களுக்கான சலுகைகள்**

7.39 முன்னைய அரசாங்கத்தினால் செயற்படுத்தப்பட்ட இடம் நகர்த்தல் திட்டத்தினால் கொழும்பில் தமது சொந்த வாழ்விடங்களையும் விருப்பத்திற்குரிய குடிமனைகளையும் விட்டுச் சென்ற மக்களின் துயரங்களை நாம் நன்கறிவோம். அவ்வாறு இடம் பெயர்க்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு ஆரம்ப முற்பணமாக 100,000 ரூபாவையும் 240 மாத காலப்பகுதிக்கு மாதமொன்றிற்கு 250 ரூபா வரை வாடகையினையும் எமது அரசாங்கம் வழங்கும்.

7.40 முன்னைய அரசாங்கத்தினால் தமது விருப்பத்திற்கு மாறாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாடி வீடுகளுக்கு நிர்ப்பந்தமாக இடம் மாற்றப்பட்டவர்களுக்கு இது பாரியதொரு நிவாரணமாக அமையுமென நான் தனிப்பட்ட வகையில் அறிவேன். நடைமுறைப்படுத்தப்பட்ட மீள் குடியேற்றல் செயன்முறையினால் பாதிக்கப்பட்ட உண்மையான குடும்பங்களுக்கு போதியளவு உதவுதொகைகள் வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

**பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் அல்லது எமது சொந்த வரவு செலவுத் திட்டங்கள்**

7.41 இந்த முன்மொழிவானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்திலுள்ள உறுப்பினர்களுடன் மிகவும் தொடர்புபட்டதாகும். இப்பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டமானது அரசியல் மயமாக்கலின் காரணமாக நீண்டகாலமாக ஒதுக்கீட்டுத் தொகையானது அதிகரிக்கப்படாமல் காணப்பட்டது. ஆகவே அதனை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

7.42 கௌரவ சபாநாயகர் அவர்களே, தற்போதைய பாராளுமன்றமானது தனித்துவமானதுடன் இன மத பண்புகளைக் கொண்ட கலவையொன்றாக காணப்படுவது மாத்திரமல்லாமல் இதற்கு முன்னர் நாம் எப்பொழுதும் கண்டிராத அரசியல் ரீதியான நட்புறவைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. “100 நாள் புரட்சி” இனை வெற்றி பெறச் செய்வதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினாலும் வழங்கப்பட்டுள்ள அர்ப்பணிப்பு எமக்கு வழங்கப்பட்ட மிக உயர்ந்த தட்டிக் கொடுப்பாகும்.

7.43 பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் மக்களுக்கு குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு பல்வேறு

வசதிகளை வழங்குகின்ற சாதனமொன்றாகக் காணப்படுகின்றது. இந்த வருடத்திலிருந்து ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற 5 மில்லியன் ரூபா இரட்டிப்பாக ரூபா 10 மில்லியனாக (100 சதவீத அதிகரிப்பு) வழங்கப்படும். இது மேலதிகச் செலவினமாக ரூபா 1,125 மில்லியனாகக் காணப்படுவதுடன் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய தமது பிரதேசங்களில் தமது சேவைகளை அதிகரிப்பதற்காக வழங்கப்படுகின்ற சாதகமான நடவடிக்கையொன்றாக நாம் கருதுகின்றோம்.

**"தேசத்திற்கு மகுடம்" – பாதகநிலையினை சாதகமாக மாற்றுதல்**

7.44 முன்னைய அரசாங்கத்தின் விருப்பத்திற்குரிய கருத்திட்டமொன்றான தேசத்திற்கு மகுடம் கண்காட்சியானது பல்வேறுபட்ட குறைபாடுகளையும் ஊழல்களையும் ஏற்படுத்தியது. 2014 இல் இக்கண்காட்சிக்காக நிதி அமைச்சினால் ரூபா 14,000 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய அமைச்சுக்களினால் பாரியளவிலான தொகை செலவிடப்பட்டுள்ளது.

7.45 தேசத்திற்கு மகுடம் கண்காட்சியானது வீண் விரயமாகக் காணப்பட்டதுடன் சிலர் நன்மையடைவதற்கும் அதன் மூலம் தம் புகழ் பாடுவதற்குமான மகுடமாகக் காணப்பட்ட அதேவேளை, தேசியப் பொருளாதாரத்திற்கு பாரியளவு அழிவினையும் ஏற்படுத்தியது.

7.46 இலங்கை மக்களுக்காக எவ்வித உணர்வுமின்றி பணத்தினை செலவிடுவது பாலுணவு விலைகளை குறைப்பதிலும் நுகர்வோருக்கு பயனளிக்கக் கூடிய அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றிற்கான விலைகளைக் குறைப்பதிலும் செலவிட முடியுமாக இருந்திருத்தல் வேண்டும்.

7.47 இந்த வீண் விரயமிக்க திட்டத்தினை நிறுத்துவதற்கும் இவ்வருடமும் எதிர்காலங்களிலும் அவற்றினை செயற்படுத்தாதிருப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். எவ்வாறாயினும், தேவையான துறைகளில் தற்பொழுது இடம் பெற்று வரும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு 1 பில்லியன் ரூபாவினை நாம் ஒதுக்கீடு செய்துள்ளோம்.

7.48 அரசியல் தேவைகளை மேம்படுத்துவதற்காக மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்த நிதி தற்பொழுது மனிதாபிமான மற்றும் நீதமான, மக்கள் நட்பு கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படவுள்ளது. இந்த வரவு செலவுத்திட்டத்தினை தயாரிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு சேமிப்பினை மிக இலகுவாக மேற்கொள்ள முடியுமாக இது காணப்பட்டது.

**சுகாதார நலன்புரி செலவினங்களை மொ.உ.உற்பத்தியில் 3 சதவீதமாக அதிகரித்தல்**

7.49 சுதந்திரம் பெற்றதிலிருந்து தொடர்ந்து ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் நாட்டிலுள்ள அனைத்து பிரசைகளுக்கும் இலவச மருத்துவ நலன்புரி ஏற்பாடுகளை வழங்குகின்ற சுகாதார நலன்புரி திட்டங்களில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு செய்துள்ளன. இதன்

விளைவாக, பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பிரதான சுகாதார சுட்டிகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் அடைந்துள்ளது.

7.50 எவ்வாறாயினும், சுகாதாரத்துறை பெற்றிருந்த நன்மதிப்பானது தொற்றாத நோய்களின் அதிகரிப்பினாலும் இடத்துக்கிடம் பரவுகின்ற நோய்களினாலும் தற்பொழுது சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இது இறப்பு வீதங்களின் அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளதுடன் இவ்விடயங்களை தீர்ப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

7.51 முக்கிய சுகாதார சேவை வழங்குனர் என்ற வகையில் அரசாங்கம் இது தொடர்பில் மிக முக்கிய பங்கினை வழங்க வேண்டியுள்ளது. இதனால் அரசாங்கம் அடுத்த வருடங்களில் 2013 இல் மொஉ உற்பத்தியில் 1.4 சதவீதமாக காணப்பட்ட சுகாதாரப் பராமரிப்புக்கான செலவினங்களை ஏறக்குறைய 3 சதவீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

7.52 அனைத்து வைத்தியசாலைகளிலும் 24 மணிநேர வெளிநோயாளர் சேவைப் பிரிவுகள், சிறுநீரக நோயாளர்களுக்கான உதவி மற்றும் சத்திரசிகிச்சைகளுக்காக காத்திருப்போரின் எண்ணிக்கையினை குறிப்பிடத்தக்களவு குறைப்பதற்கான முயற்சிகள் என்பவற்றிற்கான நிதியளிப்பு சுகாதார அமைச்சின் கலந்தாலோசனையுடன் மேற்கொள்ளப்படும்.

7.53 மக்களுக்கு தேவையான சுகாதார மருத்துவ பராமரிப்பு தேவைகளை வழங்குவதில் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதுடன் இலங்கை உயர்ந்த ஆரோக்கியமிக்க நாடொன்றாகக் கருதப்படும் அளவு நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**கல்விச் செலவினத்தினை மொ.உ..உற்பத்தியில் 6 சதவீதமாக அதிகரித்தல்**

7.54 கௌரவ சபாநாயகர் அவர்களே, கல்விக்கான செலவினங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது என்பதுடன் பொருளாதாரமொன்றின் சமூக ஏற்பாடுகளுக்கும் அவசியமானது என்பதனை நீங்கள் நன்கறிவீர்கள். கல்விக்கான அரசாங்கத்தின் அதிகூடிய செலவினமானது அனைத்து சிறுவர்களுக்கும் சமத்துவமான கல்வியினை உறுதிப்படுத்துவதுடன் மனித மூலதன அபிவிருத்தி மட்டத்தினை அதிகரிக்கச் செய்கின்றது. எனவே, நாம் சர்வதேச மட்டத்தில் தகைமை பெற்றவர்களாக தயாராகுவது சிறந்ததாகும்.

7.55 சமகால பூகோள மயமாக்கப்பட்ட உலகத்தில் கல்விக்கான தேவை குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்துள்ளது. இந்த தேவைகளை நிறைவு செய்வதற்காக பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகள் ஒப்பீட்டு ரீதியில் கல்விக்கான செலவினத்தினை அதிகமாக மேற்கொள்கின்றன. வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் காணப்படும் கல்விக்கான அரசாங்கத்தின் செலவினம் மொ.உ..உற்பத்தியில் 5.3 சதவீதமாகக் காணப்படுவதுடன் ஒப்பிடுகையில் ஆசியாவில் 2.9 சதவீதமாகக் காணப்படுகின்றது.

7.56 எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம் கல்விக்கான செலவினத்தினை மொ.உ.உற்பத்தியில் ஏறக்குறைய 2 சதவீதமாக மாத்திரம் மேற்கொள்கின்றது. தனியார் துறை கல்விச் செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த போதிலும், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கல்விக்கான செலவின அதிகரிப்பு வளர்ந்துவரும் சர்வதேச சந்தை நிலைமைகள் மற்றும் அதன் தேவைகளினைக் கருத்திற் கொண்டு அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது.

7.57 எனவே, கௌரவ சபாநாயகர் அவர்களே வறியவர்கள் கல்வியினை பெற்றுக் கொள்வதனை விரிவாக்கும் வகையில் கல்விக்கான செலவிடல் தேவைகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதுடன் வளர்ச்சிக்கான பங்களிப்பினை உறுதிப்படுத்தல் வேண்டும். உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தல் என்பன முன்னேற்றமடைந்த கல்வியினையும் சுகாதாரத்தினையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை வறியவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இந்த வகையில், மாண்புமிகு சனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட்டவாறு கல்விக்கான செலவினத்தினை மொ.உ.உற்பத்தியில் 6 சதவீதத்தினை அடையும் வகையில் படிப்படியாக அதிகரிப்பதற்கான முன்னேற்பாடுகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதற்கான முன்மொழிவுகள்**

7.58 கௌரவ சபாநாயகர் அவர்களே, தற்பொழுது நான் எமது 100 நாள் புரட்சியில் மற்றுமொரு முக்கிய விடயத்தினை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு விரும்புகின்றேன். அது முன்னைய ஆட்சியாளரினால் விட்டுச் செல்லப்பட்ட தாங்கிக் கொள்ள முடியாத வாழ்க்கைச் செலவினத்திலிருந்து பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அதிகளவிலான சலுகைகளை வழங்குவதாகும்.

7.59 வாழ்க்கைச் செலவு தொடர்பான பிரச்சினைகளை தீர்க்காமை பல வறுமையின் கீழ் உள்ளவர்களுக்கு பல பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதுடன் பதவியேற்று 20 நாட்களுக்குள் வழங்கப்பட்ட நிவாரணங்கள் ''மைத்ரி நிர்வாகம்'' இன் விளைவுகளை வெளிக்காட்டியுள்ளன. கௌரவ சபாநாயகர் அவர்களே, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே எமது அரசாங்கம் இலங்கை மக்களுக்கு அதிகமான நிவாரணங்களை வழங்குவதுடன் அவற்றினை அடுத்த வருடங்களிலும் மேற்கொள்வதற்கான ஆணையினைப் பெற்றுள்ளோம்.

**எரிபொருள் விலைகளைக் குறைத்தல்**

7.60 பெற்றோலியப் பொருட்களின் விலைகளை குறிப்பிடத்தக்களவு குறைத்ததன் மூலம் அரசாங்கம் 100 நாள் புரட்சியின் முக்கிய திட்டமொன்றினை ஏற்கனவே செயற்படுத்தியுள்ளது.

டீசலின் விலையினை லீற்றரொன்றுக்கு 95 ரூபாவாக 14.4 சதவீதத்தினால் நாம் குறைத்துள்ளோம். பெற்றோலின் விலை லீற்றரொன்று 117 ரூபாவாக 22 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் மண்ணெண்ணெய் விலை லீற்றரொன்று 65 ரூபாவாக 20 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. மீன்பிடி சமூகத்தினர், சிறியளவிலான மரக்கறி செய்கையாளர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர

தொழில்முயற்சி துறையினருக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்கும் வகையில் மேலும் லீற்றரொன்றுக்கு 6 ரூபாவினால் குறைப்பதன் மூலம் மண்ணெண்ணெய்யின் விலையினை லீற்றரொன்று 59 ரூபாவாக குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இவற்றினை நீங்கள் ஏன் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளாக கருத முடியாது?
2014 செப்டெம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றின் உள்நாட்டு விலைகள் குறைவடைந்த போதிலும் முன்னைய ஆட்சியில் அவ்வாறான விலைக் குறைப்புகள் எவ்வித தேவையான மாற்றங்களினையும் ஏற்படுத்தவில்லை.

7.61 சர்வதேச சந்தையில் காணப்படுகின்ற எண்ணெய் விலைகளின் மூலம் பெறப்படும் எத்தகைய நன்மையினையும் இந்நாட்டின் மக்களுக்கு வழங்குவதற்கு நாம் உண்மையில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். இதனால்தான் சர்வதேச பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மூலம் கிடைக்கப் பெற்ற முழுமையான நன்மையினையும் பெற்றோலியப் பொருட்கள் மீதான வரிகளை குறைத்ததன் மூலம் நுகர்வோருக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. இந்நடவடிக்கையினால் அரசாங்கம் நுகர்வோரிடமிருந்து வரிகளாக சேகரிக்கப்பட வேண்டிய ரூபா 85 பில்லியனை இழக்க வேண்டி ஏற்பட்டது.

7.62 முன்னைய அரசாங்கம் குறைவடைந்த எண்ணெய் விலைகளினை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கு நிவாரணம் எதனையும் வழங்கவில்லை என்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து பணத்தினை சூறையாடுகின்ற வேலையினையே மேற்கொண்டு வந்தது.

7.63 காலப்போக்கில் சர்வதேச சந்தைகளின் விலைகளை அடிப்படையாக வைத்து எரிபொருளுக்கு மாத்திரமல்லாது மின்சாரக் கட்டணங்களுக்கும் விலையிடல் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது. இது உள்நாட்டு எண்ணெய் விலை மற்றும் மின்சாரக் கட்டண கட்டமைப்பில் அதிக நெகிழ்ச்சிப் போக்கினை ஏற்படுத்துவதுடன் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை தளம்பலுக்கேற்ப மேலதிக நிதிச் சுமை எதனையும் திறைசேரி, இ.பெ.கூட்டுத்தாபனம் மற்றும் இ.மி.சபை என்பன நிவாரணமாக வழங்குகின்றன.

7.64 மாற்று சக்தி மூலங்களை ஊக்குவித்தல் மற்றும் அரசாங்க செலவினத்தினை குறைப்பதற்கான நடவடிக்கைகள் என்ற வகையில், அரசாங்க நிறுவனங்களில் 7 வருடங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலப்பகுதிக்குள் உபகரணங்களுக்கான மூலதன முதலீடுகளை மீள வழங்கும் வகையில் பெறுமதியினை உள்ளடக்கிய நுகர்வுக்காக சூரிய சக்தி மின் பிறப்பாக்கிகளை நிறுவுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**பயணிகள் பஸ் கட்டணங்கள், பாடசாலை போக்குவரத்து கட்டணங்களை குறைத்தல்**

7.65 தற்போதைய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் மக்களுக்கு மேலதிக நிவாரணம் வழங்கும் வகையில் பஸ் கட்டணம் ஆகக் குறைந்தது 10 சதவீதத்தினாலும் பாடசாலை வான்களுக்கான கட்டணம் ஆகக் குறைந்தது 5 சதவீதத்தினாலும் குறைக்கப்படும்.

**அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரிகளைக் குறைத்தல்**

7.66 கௌரவ சபாநாயகர் அவர்களே, பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 100 நாள் புரட்சியின் கீழ் 10 அத்தியாவசிய பொருட்கள் மீது பிரயோகிக்கப்பட்டிருந்த அதிக வரிகளினை குறைப்பதற்கான வாக்குறுதியினை சனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது நாம் வழங்கியிருந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

7.67 இன்று நள்ளிரவிலிருந்து பின்வரும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்படும் என்பதனை இவ்விடத்தில் தெரிவிப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இறக்குமதியின் போது திரட்டிய வரியாக அறவிடப்பட்ட விசேட நுகர்வுப் பொருள் அறவீடானது குறிப்பிடத்தக்க 9 பொருட்கள் தொடர்பில் நீக்கப்படுவதுடன் கோதுமை மா மீதான இறக்குமதித் தீர்வையும் நீக்கப்படும். பால் மா மீதான சில்லறை விலை நியாயமானளவு குறைக்கப்படும்.

1. **சீனி:** சீனி எமது அன்றாட வாழ்வில் மிக முக்கிய நுகர்வுப் பொருள் ஒன்றாகக் காணப்படுகிறது. தற்பொழுது விதிக்கப்படுகின்ற விசேட நுகர்வுப் பொருள் அறவீடான 28 ரூபா 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு கிலோ கிராம் ஒன்று 18 ரூபாவாக அறவிடப்படும். இதன் விளைவாக ரூபா 5,243 மில்லியன் வருமான இழப்பு ஏற்படுகின்றது. ஆகவே சீனியின் சில்லறை விலையானது 85 ரூபாவாக குறைவடைதல் வேண்டும்.

   முன்னைய அரசாங்கத்தில் சீனி என்ற விடயத்தினைக் கவனிப்பதற்காக அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதும் துரதிஷ்டவசமாக அவரின் அமைச்சின் மூலம் வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு முடியாமற் போனது.

2. **பால்மா:** அண்மைக் காலத்தில் பால்மாவிற்கான சர்வதேச விலை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருப்பதனை நீங்கள் நன்கறிந்திருப்பீர்கள். எவ்வாறாயினும், இதன் முழுப் பயனும் இதுவரை நுகர்வோருக்கு கிடைக்கப் பெறவில்லை.

   எனவே, 400 கிராம் பால்மா பைக்கற் ஒன்றிற்கான விலையினை 61 ரூபாவினால் குறைப்பதன் மூலம் 400 கிராம் பால்மாவிற்கான ஆகக் கூடிய சில்லறை விலையினை 325 ரூபாவாக குறைப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

   எமக்கு தேவையான நேரத்தில் விலைக் குறைப்புக்கு பெருமனதுடன் தமது இணக்கத்தை தெரிவித்த பாலுணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன். நாம் ‘‘மைத்ரி நிர்வாகம்’’ இன் கீழ் செயற்படுகிறோம் என்ற வகையில் இந்நிலையினை மாற்றியமைத்து அத்தகைய இறக்குமதியாளர்கள் இறக்குமதிகளிலிருந்து உள்நாட்டுப் பால் உற்பத்தியின்பால் தமது முதலீடுகளை மேற்கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். தமது தொழிற்துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்திலிருந்து சாதகமான மாற்றங்கள் சலுகைகளாகக் கிடைக்கப் பெறும்.

3. **சஸ்ரோஜன்:** நோயாளிகளுக்கான நிறையுணவாக பெரும்பாலும் சிபாரிசு செய்யப்படுகின்ற உணவுகளில் சஸ்ரோஜன் ஒன்றாகும். இவ்வுணவு

தேவைப்படுகின்ற வறியவர்களினால் பெற்றுக் கொள்ள முடியாதளவு அதன் விலை காணப்படுகின்றது. எனவே, 400 கிராம் மாவிற்கு ஏறக்குறைய 100 ரூபா விலையினை குறைப்பதற்காக 15 சதவீத சுங்கத் தீர்வையினை நாம் நீக்கியுள்ளோம். இதன் மூலம் இலங்கை மக்களுக்கு தேவையான நிவாரணம் வழங்கப்படுகின்றது.

உள்நாட்டுப் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக தற்பொழுது காணப்படுகின்ற வரிகளினை தொடர்ந்தும் பேண வேண்டிய தேவை காணப்படுவதனால் பால்மா மீதான வரிகளில் நாம் எவ்வித மாற்றங்களையும் செய்யவில்லை. பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற உத்தரவாத விலையினை 10 ரூபாவினால் அதிகரிப்பதன் மூலம் லீற்றரொன்று 70 ரூபாவிற்கு கொள்வனவு செய்வதனால் உள்நாட்டு பால் உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

4. **கோதுமை மா:** கோதுமை தானியம் மீது விதிக்கப்படும் இறக்குமதித் தீர்வை கிலோ கிராம் ஒன்றிற்கு 10 ரூபாவினால் குறைக்கப்படுவதன் மூலம் கோதுமை மாவின் விலையும் குறைக்கப்படுகின்றது. கோதுமை மாவிற்கான விலை கிலோ கிராம் ஒன்று ரூபா 12.50 சதத்தினால் குறைக்கப்படும்.

5. **பாண்:** கோதுமை மா விலை குறைவடைந்ததுடன் மின்சாரம் மற்றும் எரிபொருள் விலையில் ஏற்பட்ட குறைவு காரணமாக ஒரு இறாத்தல் பாணின் விலையானது குறைந்தபட்சம் 6 ரூபாவினால் குறைவடையும். தோட்டத் தொழிலாளர்கள் கோதுமை மா மற்றும் பாண் விலை குறைவடைவதனால் அவர்களது வாழ்க்கை முறையின் அடிப்படையில் நோக்கும்பொழுது மிகவும் மகிழ்ச்சியடைவர் என நான் நம்புகின்றேன்.

6. **பாசிப்பயறு:** பாசிப்பயறு மீது தற்பொழுது விதிக்கப்படும் 40 ரூபா விசேட நுகர்வுப் பொருள் அறவீடு 30 ரூபாவினால் குறைக்கப்பட்டு கிலோ கிராம் ஒன்றுக்கு 10 ரூபாவாக அறவிடப்படும். இதன் மூலம் இது வருமானத்தினை ரூபா 519 மில்லியனாக குறைவடையச் செய்யும். எரிபொருள் விலைகள் குறைவடைந்ததனாலும் பாசிப்பயறுக்கான சில்லறை விலை கிலோ கிராம் ஒன்றுக்கு ஏறக்குறைய 40 ரூபாவினால் குறைவடையுமென நான் நம்புகின்றேன்.

7. **நெத்தலி:** நெத்தலிக்கான விசேட நுகர்வுப் பொருள் அறவீடு தற்பொழுது 26 ரூபாவாகக் காணப்படுவதுடன் 15 ரூபா குறைக்கப்பட்டு கிலோ கிராம் ஒன்றுக்கு 11 ரூபாவாக அறவிடப்படும். இதனால் அரசாங்கத்திற்கான வருமானத்தில் ரூபா 657 மில்லியன் குறைவடையும்.

பல்வேறு காரணங்களுக்காக மக்கள் பெரிய மீன்களை உணவாகக் கொள்கின்ற காலம் காணப்பட்டதுடன் நெத்தலிக்கான விலை குறைவடைகின்ற போது போஷாக்கு நிறைந்த பொருட்களில் ஒன்றான நெத்தலியினை நுகர்வதன் மூலம் சமூகத்திலுள்ள வறிய மக்கள் நன்மையடைய முடியும்.

8. **ரின் மீன்:** இது வரிச்சலுகை வழங்க வேண்டுமென நாம் நம்பிய மிக முக்கிய அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களில் ஒன்றாகும். எனவே, ரின் மீனுக்கான தற்போதைய விசேட நுகர்வுப் பொருள் அறவீடான ரூபா 102 இனை 52 ரூபாவினால் குறைப்பதன் மூலம் கிலோ கிராம் ஒன்றுக்கு 50 ரூபா அறவிடப்படும். இதன் மூலம் நுகர்வோருக்கு பாரியளவு நிவாரணத்தினை வழங்க முடியும். இந்த நடவடிக்கையினால் வருமான இழப்பு ரூபா 1,057 பில்லியனாகும். எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையினால் ரின் மீனின் சந்தை விலை கிலோ கிராம் ஒன்றுக்கு 60 ரூபாவினால் குறைக்கப்படும்.

இப்பின்னணியில், உண்மையான பெறுமதி சேர்ப்புடன் உள்நாட்டு ரின் மீன் உற்பத்தியினை ஆரம்பிக்க இருக்கின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு அரசாங்கம் உதவி வழங்கும் என்பதனை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைவதுடன் முக்கியமான சமுத்திர வளங்களை நாம் கொண்டிருக்கின்றோம் என்ற வகையில் மீன் வளத்தினை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுவதாக நாம் நம்புகின்றோம். நாட்டில் பல ரின்மீன் உற்பத்தியாளர்கள் காணப்படுவதுடன் அவர்கள் வரிப் பாதுகாப்பினை வேண்டுகின்றனர். தற்பொழுது காணப்படும் அதிகரித்த வெளியீட்டில் அதிக ஒருங்கிணைந்த முறைமை காணப்படுமாயின் அரசாங்கம் மேலதிக உதவியினை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றது.

ரின் மீன் நுகர்வு பிரதானமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலும் கடல் மீன் கிடைக்கப் பெறாத வெளிப்பிரதேசங்களிலும் வாழ்கின்றவர்களினாலும் முக்கியமாக நுகரப்படுகின்றது என்பதனையும் நான் மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். குறைந்த விலை மேலதிகப் போஷாக்குணவான மீன் உணவினை மக்கள் நுகர்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது.

9. **கொத்தமல்லி:** முழுக் கொத்தமல்லி மீதான விசேட நுகர்வுப் பொருள் அறவீடு தற்பொழுது 46 ரூபாவாகக் காணப்படுவதுடன் கிலோ கிராம் ஒன்று 20 ரூபாவினால் குறைக்கப்பட்டு ரூபா 26 ஆக அறவிடப்படும். உடைக்கப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட கொத்தமல்லி மீதான அறவீடு கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 202 இலிருந்து ரூபா 150 இனை குறைப்பதன் மூலம் 52 ரூபாவாக அறவிடப்படும். இந்நடவடிக்கையினால் மொத்த வருமான இழப்பு ரூபா 635 மில்லியனாகக் காணப்படும்.

கொத்தமல்லி என்பது எமது சிறுபராயத்திலிருந்து அனைத்து வகையான நோய்களுக்குமான சுதேச மருத்துவ மூலிகை ஒன்றாகும். முன்னைய ஆட்சியாளர்களினால் கொத்தமல்லிகூட பாதுகாக்கப்படவில்லை என்பது துரதிஷ்டவசமானதாகும்.

10. **உழுந்து:** இது மிக முக்கியமான நுகர்வுப் பொருள் என்பதுடன் குறிப்பாக தமிழ் மக்கள் தமது விருப்பத்திற்குரிய உணவுகளை இதன் மூலம் தயாரித்துக் கொள்கின்றனர். உழுந்து மீது தற்பொழுது விதிக்கப்படும் விசேட நுகர்வுப் பொருள் அறவீடு கிலோ கிராம் ஒன்றுக்கு 110 ரூபாவிலிருந்து 60

ரூபா குறைக்கப்பட்டு 200 ரூபாவாக அறவிடப்படும். உழுந்து மா மீதான விசேட நுகர்வுப் பொருள் அறவீடு கிலோ கிராம் 300 ரூபாவிலிருந்து 100 ரூபா குறைக்கப்பட்டு 50 ரூபாவாக அறவிடப்படும். இந்த விலைக்குறைப்பின் முழுமையான நன்மையினை உரிய நுகர்வோருக்கு முழுமையாக வழங்குமாறு உணவுப் பொருள் தயாரிப்பாளர்களை நான் வேண்டிக் கொள்கின்றேன்.

11. **மாசி:** மாசிக்கான நுகர்வுப் பொருள் அறவீடு கிலோ கிராம் ஒன்று ரூபா 302 ஆக காணப்படுவதுடன் 200 ரூபா குறைக்கப்பட்டு கிலோ கிராம் ஒன்றுக்கு நுகர்வுப் பொருள் அறவீடாக 102 ரூபா அறவிடப்படும்.
வரிகளைக் குறைப்பதற்கு ஊக்குவிப்புகளை வழங்குவதன் மூலம் விலைகளை குறைக்க முடியுமான பொருளாக இது காணப்படுவதனை நாம் அவதானித்துள்ளோம். எனினும், மாசி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் இந்த நன்மையினை முழுமையாக மக்களுக்கு வழங்க வேண்டுமென நான் உறுதியாகக் கேட்டுக் கொள்கின்றேன்.
மிக நீண்ட காலமாக இலங்கையில் உள்ள குடும்பப் பெண்கள் தமது சமையல்களில் சேர்த்துக் கொள்ளும் மிக முக்கிய பொருளாக மாசி காணப்படுகின்றது. சமையல் தேவைகளுக்காக அதிகமாக பயன்படுத்தப்படுவதனால் இந்த விலைக் குறைப்பானது பெரும்பாலான இலங்கையர்களிடத்தில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும்.

12. **மஞ்சள்:** துண்டு மஞ்சள் மீதான விசேட நுகர்வுப் பொருள் அறவீடு தற்பொழுது 202 ரூபாவாக அறவிடப்படுகின்றது. அதனை நாம் 100 ரூபாவினால் குறைத்து கிலோ கிராம் ஒன்றிற்கு 102 ரூபாவாக அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளோம். இதன் மூலம் அரசாங்கம் வருடத்திற்கு ரூபா 426 மில்லியன் வருமானத்தினை இழக்கின்றது.
அத்துடன் தூள் மஞ்சள் மீதான விசேட நுகர்வுப் பொருள் அறவீடு 150 ரூபாவினால் குறைக்கப்பட்டு கிலோ கிராம் ஒன்றிற்கு 360 ரூபாவாக அறவிடப்படும். இவ்வாறான வேறு இறக்குமதிகள் காணப்படவில்லை என்ற வகையில் இந்நடவடிக்கையினால் வருமானம் தொடர்பான எவ்வித பிரச்சினைகளும் ஏற்படப் போவதில்லை.

13. **மிளகாய்:** மிளகாய் தூள் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 150 தற்பொழுது விதிக்கப்படுவதுடன் 25 ரூபாவினால் குறைக்கப்பட்டு ரூபா 125 ஆக அறவிடப்படும். எவ்வாறாயினும், செத்தல் மிளகாய் மீதான அறவீடு ரூபா 125 இல் உள்நாட்டு உற்பத்தியினை ஊக்குவிக்கின்ற வகையில் எவ்வித மாற்றமும் செய்யப்பட மாட்டாது. இது வருடமொன்றிற்கு அரசாங்க வருமானத்தில் ரூபா 2 மில்லியனை இழக்கச் செய்கின்றது.
நன்னோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற இந்த விலைக் குறைப்பினால் மிளகாய் செய்கையாளர்கள் தடுமாற்றம் அடைய மாட்டார்கள் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

7.68 மேலே குறிப்பிடப்பட்ட முன்மொழிவுகளின் மொத்தத் தாக்கம் 2015 இல் அரசாங்க வருமானத்தில் குறிப்பிடும்படியான ஒரு குறைவை ஏற்படுத்தும். இவ்வரிக் குறைப்புக்களின் முழுமையான நன்மை நுகர்வோரைச் சென்றடைவதை கண்காணித்து உறுதி செய்வது நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பொறுப்பாகும்.

7.69 கௌரவ சபாநாயகர் அவர்களே, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே நாம் வாக்குறுதி அளித்ததனைவிட அதிகமாக வழங்கியுள்ளோம். எமது வாக்குறுதியானது 10 உணவுப் பொருட்களின் விலைகளை குறைப்பதாக இருந்தபோதிலும் அதனைவிட அதிகமாக நாம் செயற்படுத்தியுள்ளோம். இதன் மூலம் 12 பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

7.70 இந்த விலைக்குறைப்பு நடவடிக்கைகளின் மூலம் எமது நாட்டு மக்கள் எதிர்நோக்கிய மிகவும் நெருக்கடியான காலப்பகுதியிலிருந்து விடுவிக்கப்படுவர்.

**ஆபரணங்களை அடகு வைத்தவர்களுக்கான விசேட நிவாரணம்**

7.71 இலங்கையர்கள் விரிந்த குடும்ப அமைப்பினை கொண்டவர்கள் என்பதுடன் அக்குடும்பத்தின் முக்கிய தூணாக தாய் என்பவள் காணப்படுவதுடன் எவ்வித சங்கடங்களுமின்றி அனைத்து சுமைகளையும் அவள் சுமந்து கொள்கிறாள். பொருளாதார நெருக்கடி ஏற்படுகின்ற போது அவளின் பெற்றோரிடமிருந்து கிடைக்கப் பெற்ற குடும்ப ஆபரணங்களின் சில துண்டுகளை வங்கியில் அடைமானமாக வைக்கிறாள். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினை முகம் கொடுப்பதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குவதன் மூலம் மக்களின் துயரங்களை எமது அரசாங்கம் நன்கு அறிந்துள்ளது.

7.72 கடந்த தசாப்தத்தின் போது வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் ஏற்பட்ட போராட்டத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு விசேட நிவாரணம் என்ற வகையில் அரச வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட 200,000 ரூபாவினை விஞ்சாத பெறுமதியுடைய ஆபரணங்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் நீக்கப்படும்.

7.73 யுத்தத்தின் போது பறிமுதல் செய்யப்பட்ட ஆபரணங்களை அப்பாவி குடும்ப உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டதனை சனாதிபதித் தேர்தல் காலத்தின் போது நாம் கண்டோம் என்பதனை குறிப்பிடுதல் வேண்டும். எவ்வாறாயினும், ஜெனரல் பொன்சேகா மற்றும் இராணுவத்தினரால் நான்கு கொள்கலன்கள் அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டதனை நாம் அறிவோம். அரசாங்கத்தினால் அரைவாசி கொள்கலன் தங்கம் வெளிக்காட்டப்பட்டது என்ற வகையில் எஞ்சிய மூன்றரை கொள்கலன்களில் காணப்பட்ட தங்கம் என்னவானது என்ற கேள்வியினை நாம் கேட்பதற்கு விரும்புகின்றோம்.

**எல்பீ வாயு விலைகளைக் குறைத்தல்**

7.74 சர்வதேச வாயு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி வாயு இறக்குமதி மற்றும் விநியோகத்தினை மேற்கொள்கின்ற கம்பனிகளுக்கு பாரியளவிலான இலாபத்தினை கிடைக்கச் செய்தது. இந்த வகையில் குறித்த நன்மையினை அன்றாடம் தமது வாழ்க்கைப் போராட்டத்தினை நடத்திக் கொண்டிருக்கின்றவர்களுக்கு நாம் கிடைக்கச்

செய்தல் வேண்டும். எனவே, 12.5 கிலோ கிராம் சிலிண்டர் ஒன்றுக்கான விலையினை 300 ரூபாவினால் குறைத்து இன்று நள்ளிரவிலிருந்து 12.5 கிலோ கிராம் சிலிண்டர் ஒன்றுக்கான விலையினை ரூபா 1,596 ஆக நான் முன்மொழிகின்றேன்.

7.75 சர்வதேச வாயு விலைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் பலாபலன் ஏன் இலங்கை மக்களுக்கு கிடைக்கப் பெறவில்லை என்பது எமக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. இது மிக அண்மையில் தலைப்புச் செய்திகளாக வரவிருக்கின்ற ஊழல் மோசடிகள் தொடர்பான மற்றுமொரு சம்பவமாகவும் இருக்க முடியும்.

## 08. வருமான முன்மொழிவுகள்

8.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, வரவு செலவுத்திட்டத்தின் செலவினம் மற்றும் வருமானம் ஆகிய இரண்டு பக்கங்களிலும் மாற்றங்களை மேற்கொண்டு வாழ்க்கைச் செலவின் சுமைகளைக் குறைப்பதற்கு நாம் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை முன்மொழிந்துள்ளோம் என்பதனை நீங்கள் நன்கறிவீர்கள். அதேவேளை, இந்த முன்மொழிவுகளை அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் செயற்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

8.2 இதனை மேற்கொள்வதற்கு மிகவும் பொருத்தமான வழிமுறை யாதெனில், அரசாங்கத்தின் வருமானத்தினை அதிகரிப்பதன் மூலம் தேவையான மேலதிக நிதியினை தேடிக் கொள்வதாகும். அவ்வாறு செய்கின்ற பொழுது, எமது கொள்கையுடன் இணங்கும் வகையில் பல்வேறு வழிமுறைகளை நாம் தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

8.3 முன்னைய ஆட்சியில் முறையற்ற வகையில் சலுகைகளைப் பெற்று சொத்துக்களை சேகரித்துக் கொண்டதுடன் அதிகூடிய வருமானத்தினை ஈட்டுபவர்கள் மீதும் கம்பனிகள் மீதும் நாம் வரிகளை விதிக்க வேண்டியுள்ளது. அதேவேளை, நாம் இந்நாட்டின் சாதாரண மக்கள் அனுபவித்த துன்பங்களை நன்கறிந்தவர்கள் என்ற வகையில் அப்பாவி மக்கள் மீது முறையற்ற வரி எதனையும் நாம் விதிக்கப் போவதில்லை.

8.4 நல்லாட்சி போன்ற முன்மொழிவுகள் மக்கள் நட்பு மிக்கனவாகவும் மக்கள் மீது முறையற்ற வரிகளின் மூலம் சுமையினை ஏற்படுத்தாததாகவும் இருக்கும். மேலும், எமது எதிர்கால சந்ததியினர் பாரிய கடன் சுமைகளை சுமக்காது இருப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் கடன் பெறுகை கட்டுப்படுத்தப்படும்.

8.5 மைத்ரி நிர்வாகமானது பொறாமை, பகைமை மற்றும் குறுகிய மனப்பான்மை என்பவற்றினை நீக்கி அனைவருக்கும் சுபீட்சத்தினை வழங்குவதுடன் நல்லாட்சியின் சிறந்த பண்புகளை உறுதிப்படுத்தும் அதேவேளை சமூகத்திலுள்ள அனைத்து தரப்பினரும் எச்சந்தர்ப்பத்திலும் நன்மையினை பயக்கக் கூடியதாக இருக்கும்.

8.6 இந்த 100 நாள் புரட்சியில் நாம் பின்வரும் புதிய முன்மொழிவுகளை முன்வைத்துள்ளோம்.

**வரி வருமான முன்மொழிவுகள்**

**மாளிகை வரி**

8.7 பல வருடங்களாக அரசாங்கமானது வீடுகள் மற்றும் ஆதனங்கள் விற்பனையுடன் தொடர்புபட்ட மூலதன இலாபங்கள் மீதான வரி அறவிடுவதை தவிர்த்து இருந்தது. எவ்வாறாயினும், தற்போதைய நடைமுறைச் சூழ்நிலையில் உரிய வருமானங்களை உயர் மற்றும் ஆடம்பர வீடுகளைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்காக மீண்டும் அதையொத்த பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மாளிகை வரி என்ற சொல்லின் மூலம் குறிப்பிடப்படுகின்ற வரியானது ரூபா 100 மில்லியன் அல்லது அதற்கு அதிகமான பெறுமதியினைக் கொண்ட அல்லது 5,000 சதுர அடி அல்லது அதற்கு அதிகமான விஸ்தீரணமுடைய ஆடம்பர மாளிகை அவற்றில் எது அதிகமோ அதற்கு குறித்த வீட்டு உரிமையாளர்களிடமிருந்து வருடாந்தம் ரூபா 1 மில்லியனை வரியாக அறவிடப்படும். உரிய வரியானது வருடாந்தம் 2015 ஆம் ஆண்டிலிருந்து உள்ளூராட்சி மன்றங்களினூடாகச் சேகரிக்கப்படும். இது உள்ளூராட்சி மன்றங்களினால் சேகரிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் சோலை வரிகளுக்கும் மேலதிகமானதாகும். இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம் ரூபா 1,000 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**குடியகல்வு வரி**

8.8 இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு குடிபெயரும் போது இலங்கையில் சம்பாதித்த அவர்களது சொத்துக்களை வெளிநாட்டு நாணயங்களாக மாற்றுகின்றனர். எவ்வாறாயினும், அரசாங்கமானது இலங்கையர்கள் அனைவரையும் தமது சக்திக்குட்பட்ட வரையில் நாட்டிற்கு சேவையாற்றுமாறு அழைப்பு விடுக்கின்றது. எவ்வாறாயினும், அவர்கள் நிரந்தரமாக நாட்டை விட்டு செல்வதற்கு எண்ணுகின்ற பொழுது குடியகல்வில் நாட்டிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்படுகின்ற அத்தகைய அனைத்து வெளிநாட்டு செலாவணிகளுக்கும் 20 சதவீத வரி விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**இரட்டை குடியுரிமை**

8.9 இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட அனைவருக்கும் இரட்டை குடியுரிமை தேர்வு வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு தனிப்பட்ட வேண்டுகோள்களுக்கும் ரூபா 500,000 செலுத்துவதன் மூலம் உரிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு இரட்டை குடியுரிமை வழங்கப்படும்.

8.10 மேலும், இலங்கையில் வதிவிட அந்தஸ்தை கோருகின்ற 10 மில்லியன் ஐ.அ.டொலர்களை முதலீடு செய்கின்ற நிலைமையிலுள்ள வெளிநாட்டவர்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்படும். அவ்வாறான அனைத்து வதிவிட அந்தஸ்துகளும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்கு உட்படுவதோடு ஒவ்வொரு 5 வருடங்களிலும் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். வீசாக் கட்டணமாக ரூபா 2.5 மில்லியன் அறவிடப்படும்.

**சிறப்பு இலாப வரி**

8.11 கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கையில் சில கம்பனிகள்/வியாபாரங்கள் கடந்த ஆட்சியின்போது முறையற்ற சலுகைகளினூடாக கடந்த பல வருடங்களாக சிறப்பு இலாபங்களை சம்பாதித்துள்ளதை நாம் அவதானித்துள்ளோம். இது நாட்டிலுள்ள ஏனைய கம்பனிகளின்/வியாபாரங்களின் அபிவிருத்திச் செலவினங்களின் மூலம் சம்பாதிக்கப்பட்டவையாகும்.

8.12 இந்நிலைமையினை எவ்வகையிலும் சகித்துக் கொள்ள முடியாது. நாங்கள் பொறுப்புடைய அரசாங்கம் என்ற வகையில் முறையான பொறிமுறையொன்றினூடாக சமூகத்திற்கு நீதியினைப் பெற்றுக் கொடுப்பது எமது கடமையாகும்.

8.13 இப்பின்னணியில், ஒரே தடவையில் செலுத்தும் கட்டணமாக சிறப்பு இலாப வரியொன்றினை விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்கமைவாக, 2013/2014 வரி வருடத்தில் 2,000 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட இலாபத்தினை சம்பாதித்த ஏதேனும் கம்பனி அல்லது தனிநபர் அவர்களது இலாபத்தில் 25 சதவீதத்தினை செலுத்துவதற்கு கடப்பாடுடையவராவார். இது இக்கம்பனிகளினால் முறையற்ற விதத்தில் சம்பாதிக்கப்பட்ட இலாபங்களை பொதுமக்களுக்கு மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு உதவியாக இருக்கும். 2015 இல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம் ரூபா 50,000 மில்லியனாகும்.

**உழைக்கும் பொழுது செலுத்தும் வரியின் விலக்களிப்பினை அதிகரித்தல்**

8.14 தற்பொழுது காணப்படும் வரி முறைமையின் கீழ் உழைக்கும் பொழுது செலுத்தும் வரியிலிருந்து ஊழிய வருமானத்தின் முதல் 600,000 ரூபா விலக்களிக்கப்பட்டுள்ளது. உழைக்கும் பொழுது செலுத்தும் வரி செலுத்துனர்களுக்கு மேலும் நிவாரணம் வழங்கும் வகையில் இத்தொகையானது 2015 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து செயற்படுத்தப்படும் வகையில் 750,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**பின்தங்கிய பிராந்தியங்களுக்கான வருமான வரிச் சலுகைகள்**

8.15 நாட்டின் பின்தங்கிய பிராந்தியங்களில் வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் பிராந்திய வறுமையை தணிப்பதற்கும் முதலீடுகளை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. ஆகவே, வருமான வரி ஆணையாளர் நாயகத்தினால் பெயர் குறிப்பிடப்படும் பின்தங்கிய பிரதேசங்களில் முதலீடு செய்வதற்கு விரும்புகின்ற முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

8.16 இதற்கமைவாக, இக்கருத்திட்டங்களின் கீழ் சம்பாதிக்கப்பட்ட இலாபங்கள் சாதாரண வருமான வரி விகிதத்தின் 50 சதவீதமாக அறவீடு செய்யப்படும்.

**வாகன வரிகளைத் திருத்துதல்**

8.17 குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினர் வாகனமொன்றை கொள்வனவு செய்து தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கில் 1,000 *சீசீ* கொள்ளளவுக்கு குறைந்த இயந்திரக் கொள்ளளவு கொண்ட மோட்டார்

கார்களுக்கு ஏற்புடையதான வரியினை 25 சதவீதத்தினால் குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

8.18 தற்பொழுது காணப்படும் மோட்டார் வாகனங்களுக்கான வரிக்கட்டமைப்பானது ஹைபிரிட் மற்றும் சாதாரண மோட்டார் கார்களுக்கிடையில் ஆரோக்கியமற்ற முரண்பாடொன்றை உருவாக்கியுள்ளது. இம்முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கு ஹைபிரிட் வாகனங்கள் மீதான ஏற்புடைய உற்பத்தி வரியினை திருத்துவதற்கு முன்மொழிகிறேன். இம்மாற்றங்கள் இன்று நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வரும்.

8.19 தற்பொழுது இறக்குமதியின் போது வாகனங்களின் பெறுமானத் தேய்வு மதிப்பீட்டு நடைமுறையானது வாகனங்களின் பெறுமதியினை குறைத்து மதிப்பீடு செய்தல் மற்றும் பதிவு திகதியினை மாற்றுதல் போன்ற பல மோசடிகளுக்கு வழிவகுத்துள்ளது. இது அரசாங்கம் பெருந்தொகையான வருமானத்தினை இழப்பதற்கு காரணமாக அமைந்தது. இதற்குத் தீர்வாக தற்போது நடைமுறையிலுள்ள தேய்மான அட்டவணையை இன்று நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நீக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**நிர்மாணக் கைத்தொழில்**

8.20 இன்று கட்டிட நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றமானது சீமெந்து, உருக்கு மற்றும் மணல் போன்ற உள்ளீட்டுப் பொருட்களின் அதிகூடிய விலை காரணமாக தடைப்பட்டுள்ளது. இப்பிரச்சினையினை நீக்கும் வகையில், சீமெந்து மற்றும் உருக்குக் கம்பிகளுக்கு ஏற்புடையதான சுங்கத் தீர்வையினை நீக்குவதற்கு முன்மொழிகின்றேன். மேலும், கட்டிட நிர்மாணத்துறைக்கு மிக முக்கியமான உள்ளீட்டுப் பொருளான மணல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எமது சுற்றாடலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அது அகழ்வு செய்யப்படும்.

**உள்ளூர் மோட்டார் வாகன உற்பத்தியாளர்களிடமிருந்து இழக்கப்பட்ட வரி வருமானத்தினை மீள அறவிடுதல்**

8.21 நாட்டில் மோட்டார் வாகனங்களை பொருத்துகின்ற தொழிலில் ஈடுபட்ட சில கம்பனிகள் பல்வேறு காரணங்களை முன்வைத்து அரசாங்கத்திற்கான வரியினை முழுமையாக செலுத்தாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

8.22 இக்கம்பனிகள் வாகன தயாரிப்புத் தொழிலில் நாட்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி சேர்ப்பு தொடர்பில் மீளாய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதுடன் இக்காலப்பகுதியில் அவர்களினால் செலுத்தப்பட்ட உற்பத்தி தீர்வை தொகை பற்றியும் மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

8.23 இக்கம்பனிகளினால் வெளிப்படுத்தப்பட்ட பெறுமதி சேர்ப்பானது செய்யப்படாமை கண்டுபிடிக்கப்படுமானால் அவற்றிற்குரிய முறையான வரிகள் இக்கம்பனிகளிடமிருந்து அறவிடப்படும்.

8.24 கடந்த சில வருடங்களில் மோட்டார் வாகனங்கள் பொருத்தும் தொழிலில் ஈடுபட்ட கம்பனிகளினால் அங்கீகரிக்கின்ற அதிகாரிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட

தகவல்களின் உண்மைத் தன்மையானது ஒரு முழுமையான கணக்காய்வு உறுதிப்படுத்தல் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படும். இந்நோக்கத்திற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம், வர்த்தகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், கணக்காய்வாளர் நாயகம், சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வுத் துறையிலிருந்து ஒரு உறுப்பினரைக் கொண்ட அதியுயர் குழுவொன்று நியமிக்கப்படும்.

**உள்நாட்டு மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி உற்பத்தியினை ஊக்குவித்தல்**

8.25 உள்நாட்டு உற்பத்தி/உள்நாட்டு பெறுமதி சேர்ப்பினை ஊக்குவிப்பதற்காக மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் தயாரிப்பு/பொருத்துதலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதிரிப்பாகங்களுக்கான வரிகள் முழுமையாக நீக்கப்படும்.

**பயணிகள் பேரூந்துகளின் இறக்குமதி தொடர்பான உச்ச கால எல்லையினை மாற்றியமைத்தல்**

8.26 பயணிகளின் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் பேரூந்துகள் தொடர்பாக இறக்குமதி செய்யக் கூடிய உச்ச கால எல்லை 5 வருடங்களிலிருந்து 10 வருடங்கள் வரை நீடிக்கப்படும். இந்நீடிப்பானது சுற்றுலாக் கைத்தொழிலுக்கான போதிய பேரூந்துத் தொகுதிகளை அளிக்கும் நோக்கத்துடனே வழங்கப்படுகின்றது.

**இலங்கைச் சுங்கம்**

8.27 இலங்கை மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை சுங்கத் திணைக்களம் முழு நேர சேவைகளை வழங்கும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது. அர்ப்பணமிக்க சேவையொன்றினை நாட்டுக்கு வழங்கு வதனூடாக மகத்தான பங்களிப்பினை செய்த சுங்க அதிகாரிகளுக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். கடந்த அரசாங்கத்தில் அரசியல் அழுத்தங்கள் மற்றும் முறையற்ற செல்வாக்கு என்பவற்றிற்கெதிராக எழுந்து நின்ற சுங்க அதிகாரிகளுக்கு எனது விசேட நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுங்க ஸ்கானிங் இயந்திரம்**

8.28 அண்மைக் காலத்தில் எத்தனோல், போதைப் பொருட்கள் மற்றும் ஏனைய உயர் பெறுமதியுடைய பொருட்கள் சுங்கப் பரிசோதனைக்குட்படாமல் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டமையினால் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் நுழைவாயில்கள் அனைத்திலும் நவீன ஸ்கானிங் இயந்திரங்களை பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொள்கலன்கள் கட்டாயமாக ஸ்கான் செய்யப்படுதல் வேண்டும். இது 2015 செப்டெம்பர் 1 ஆம் திகதியளவில் அமுல்படுத்தப்படுவதோடு இதன் மூலம் ஏறக்குறைய ரூபா 50 பில்லியன் மேலதிக வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**சுங்க மதிப்பீட்டு மீளாய்வு குழு**

8.29 சுங்க திணைக்களத்தில் விலை மதிப்பீடுகள் தொடர்பில் ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்ப்பதற்கு வசதியளிக்கும் வகையில் விலை மதிப்பீட்டு மீளாய்வுக் குழுவொன்று நியமிக்கப்படுவதுடன் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திலிருந்து 2

பிரதிநிதிகளும் கணக்கீட்டு உயர் தொழில் புரிநர்கள், சட்டத் தொழில் புரிநர் மற்றும் வியாபார மன்றம் என்பவற்றிலிருந்து ஒரு பிரதிநிதியினை இக்குழு கொண்டிருக்கும்.

**இலங்கை முதலீட்டுச் சபையில் வியாபார சமூகத்திற்கான விரிவாக்கப்பட்ட வசதிகள்**

8.30 வியாபார சமூகத்திற்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்காக பின்வரும் அரசாங்க நிறுவனங்களை உள்ளடக்கிய வியாபார வசதியளிப்பு வலையமைப்பு அலகொன்று உருவாக்கப்படும். உள்நாட்டு இறைவரி திணைக்களம், முதலீட்டுச் சபை, வர்த்தகத் திணைக்களம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர், மோட்டார் வாகன பதிவாளர், கம்பனிகள் பதிவாளர் மற்றும் நிதியமைச்சு என்பன அவையாகும். இந்த வலையமைப்பு செயன்முறையானது முதலீட்டு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 100 நாட்களுக்குள் உரிய அங்கீகாரத்தினை கோருகின்ற தொழில் முயற்சியாளர் ஒருவருக்கு உதவியாக இருக்கும்.

8.31 இலங்கையானது யுத்தத்திற்கு பின்னரான உள்நாட்டிலும் வெளிநாடுகளைச் சேர்ந்த தனியார் முதலீட்டாளர்களுக்கிடையில் நம்பகத்தன்மையினை ஏற்படுத்துவதற்கு முடியாமற் போனது. இதன் விளைவாக தனியார் முதலீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக ஏறக்குறைய 20 சதவீதமாக வளர்ச்சியின்றி காணப்பட்டது. இது பிரதானமாக அரசாங்கமானது உள்நாட்டு வங்கிகளுடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச மூலதன சந்தைகளில் குறிப்பிடத்தக்களவு கடன் பெற்றமையினால் ஏற்பட்டதாகும். அரசாங்கத்தின் இந்த மிகையான கடன் பெறுகையினால் தனியார் துறையினருக்கான சந்தர்ப்பங்கள் இல்லாது போயின.

8.32 இந்நிலைமையினை மிக விரைவாக திருத்துவதற்கு முடியும். மாண்புமிகு மைத்ரிபால சிறிசேன அவர்களின் புதிய அரசாங்கத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்திக்கான உந்துதலானது அரசாங்கத் துறையினால் நிதியீட்டம் செய்யப்பட்ட உட்கட்டமைப்பு கருத்திட்டங்களில் அதிகமாக தங்கியிருக்காது உள்நாட்டு நுகர்வினை தூண்டுவதுடன் அரசாங்க - தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தும் வகையில் மாற்றப்படும்.

8.33 எம்மால் குறிப்பிடப்பட்ட முன்னெடுப்புகளில் இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பாரியளவிலான ஏற்றுமதி ஊக்குவிப்பு வலையங்களின் நிர்மாணத்தினை உடனடியாக ஆரம்பித்தலும் உள்ளடங்குகின்றது. கடந்த 10 வருடங்களில் இவ்வாறான எந்தவொரு வலையமும் நிர்மாணிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், முதலீட்டு ஊக்குவிப்பு சபையின் அனுபவமானது இவ்வாறானதொரு வலையம் உடனடியாக நிர்மாணிக்கப்படுமாயின் அது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரக் கூடியதாக இருக்கும். தற்பொழுது காணப்படுகின்ற ஊக்குவிப்பு வலையங்களில் பயன்படுத்தப்படாத ஆற்றலினை பயன்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளினையும் நாம் எடுப்போம்.

**கெசினோ கைத்தொழில் தொடர்பான விஷேட அறவீட்டு வரி**

8.34 கெசினோ வர்த்தகர்களிடமிருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ரூபா 1,000 மில்லியன் வரி அறவிடப்படும். இது ஒரே முறையில் செலுத்தப்பட வேண்டிய

ஒரு அறவீடாக உள்ளதோடு, 2015 ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னா் செலுத்தப்படல் வேண்டும்.

**பந்தயம் மற்றும் சூதாட்ட வரி**

8.35 பந்தயம் மற்றும் சூதாட்ட வரிச் சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வருடாந்த வரி இரட்டிக்கப்படும்.

**மதுபானம் மற்றும் பியர் தயாரிப்பாளர்கள் மீது வருடாந்த வரியை விதித்தல்**

**8.36** நாட்டின் வருமானம் இழக்கப்படுகின்ற வகையில் மதுபான உரிமங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற மற்றும் கையாடல் செய்யப்படுகின்ற நிகழ்வுகள் பல காணப்படுகின்றன.

8.37 எனவே, கேள்வி மனுப் பத்திரம் கோருவதன் மூலம் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான மீள ஒழுங்குபடுத்தல் செய்முறை ஒன்றினை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய திட்டத்தின் கீழ் ஒரு தனிநபர் 3 அனுமதிப் பத்திரத்திற்கு மேல் பெற்றுக் கொள்ள முடியாது. கேள்வி மனுக்கூரல் செய்முறையில் வெளிப்படைத்தன்மையானது பின்பற்றப்படும்.

8.38 இச்செய்முறை அமுலாகும் வகையில் மதுபானச்சாலை அனுமதிப் பத்திரங்களுக்கான கட்டணமானது மறு அறிவிப்பு வரை இரட்டிப்பாக்கப்படும்.

8.39 சகல மதுபானத் தயாரிப்பாளர்கள் மற்றும் பியர் தயாரிப்பாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கான வரியாக குறைந்தது ரூபா 200 மில்லியன்களை அறவிடுவதற்கு

8.40 2016 இன் ஆரம்பத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் திறந்த விலைமனுக்கோரல் முறையின் கீழ் வெளிப்படையான முறையில் மதுபான அனுமதிப்

**மதுபான கூடங்கள் மற்றும் தவறணைகள் மீதான விஷேட வரியொன்றினை விதித்தல்**

8.41 தவறணைகள் அல்லது மதுபான விற்பனை நிலையங்களிடமிருந்து ரூபா 250,000 பெறுமதியான ஒரே முறையில் செலுத்தப்பட வேண்டிய விஷேட அறவீட்டு வரியொன்றை அறவிடுவதற்கு முன் மொழியப்படுகின்றது.

**பீடிக் கைத்தொழிலை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான பிரேரணை**

8.42 சிகரெட்டுக்கள் மீதான உயர்வான வரிகள், சுகாதாரத்திற்கு அதிகளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய முறையில்லாத முறைமையொன்றின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற குறைவான விலையைக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் மீதான நுகர்வினை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது. எனவே, பீடிக் கைத்தொழிலை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்படும். அத்தோடு பீடி உற்பத்தியாளர்களனால் தொடர்ந்து அக்கைத்தொழிலை மேற்கொள்வதற்கான ஆற்றல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும்.

**திருமணப் பதிவுக் கட்டணத்தினைக் குறைத்தல்**

8.43 தன்னிச்சையாக அதிகரிக்கப்பட்ட திருமணத்திற்கான பதிவுக் கட்டணமான ரூபா 5,000, ரூபா 1,000 ஆகக் குறைக்கப்படும்.

**வரிகளை செம்மைப்படுத்தல்**

8.44 இலங்கை வரி செலுத்துனர்கள் பல்வேறு வரி வகைகளினால் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றனர். இந்த நாட்டிலுள்ள வரி செலுத்தும் சமூகத்தினருக்கு வசதியளிக்கும் அதேவேளை வரி நிர்வாகத்தினை வினைத்திறன்மிக்க ஒன்றாக மாற்றுவதற்கு உதவும் வகையில் அடுத்த வருடத்தின் போது வரி முறைமையினை இலகுபடுத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். தற்பொழுது காணப்படும் 38 வரிகளும் அறவீடுகளும் 20 ஆக குறைக்கப்படுவதுடன் இதனை மிக விரைவில் செயற்படுத்துவது எமது நோக்கமாகும்.

**வரியல்லாத வருமான முன்மொழிவுகள்**

**உரிமம் அளிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி இயக்குனர்கள் மீதான அறவீடு**

8.45 இலங்கையிலுள்ள உரிமம் அளிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி இயக்குனர்கள் அனைவருக்கும் ரூபா 250 மில்லியன் ஒரே தடவையில் அறவிடப்படும்.

**செய்மதிகளினூடாக நேரடி வீட்டு சேவைகள் மீதான அறவீடு**

8.46 50,000 இற்கு அதிகமான இணைப்புக்களைக் கொண்ட செய்மதி நேரடி வீட்டு சேவைகளுக்கான கம்பனிகளின் வர்த்தக தொழிற்பாடுகள் இலங்கையில் பல வருடங்களாக எவ்வித கட்டணமும் செலுத்தப்படாமல் தொழிற்படுவதன் மூலம் அரசாங்கத்திற்கான வருமானம் இழக்கப்படுகின்றது. இவ்வருமானத்தினை மீளப் பெற்றுக் கொள்வதற்கு அத்தகைய கம்பனிகள் மீது ரூபா 1,000 மில்லியனை ஒரே தடவையில் அறவிடுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**செய்மதி நிலையங்களைப் பயன்படுத்துதல் மீதான அறவீடு**

8.47 இலங்கை செய்மதிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களைப் பயன்படுத்துகின்ற உரிமையாளர்கள் விசேட அறவீடாக ஒரே தடவையில் ரூபா 1 பில்லியனை செலுத்துதல் வேண்டும்.

**விளையாட்டுக்கான பிரத்தியேக அலைவரிசைகள்**

8.48 அதேபோல் விளையாட்டுக்கான பிரத்தியேக அலைவரிசைகள் அரசாங்கத்திற்கான வருமானத்தை இழக்கச் செய்துள்ளது. நாடு பூராகவும் 5 இற்கும் மேற்பட்ட பரிமாற்றல் நிலையங்களைக் கொண்ட விளையாட்டுக்கான பிரத்தியேக அலைவரிசைகளுக்கு ரூபா 1,000 மில்லியன் அறவிடுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**முன்கட்டண கையடக்க தொலைபேசி கட்டணங்கள்**

8.49 இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற கையடக்கத் தொலைபேசிகளின் எண்ணிக்கை எண்ணிலடங்காதவையாக இருப்பினும் அவை மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. மாறி வருகின்ற உலகத்தில் கையடக்கத் தொலைபேசிகள் அன்றாட தேவையாக காணப்படுகின்றது. குறிப்பாக இளம் சந்ததியினருக்கும் இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் தற்பொழுது நுகர்வோரிடமிருந்து அரசாங்கத்திற்கு

செலுத்தப்படும் 25 சதவீத வரி கையடக்கத் தொலைபேசி இயக்குனர்களிடமிருந்து அறவிடப்படும். இச்சந்தர்ப்பத்தில் நுகர்வோரின் நாளாந்த செலவினைக் குறைப்பதற்கு உதவும் வகையில் சேவை வழங்குனர்களின் ஒத்துழைப்பினை எமது அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

**அரச உடமை தொழில்முயற்சிகளின் இலாபங்கள், பங்கிலாபங்கள் மற்றும் அறவீடுகள்**

8.50 அரசாங்க நிறுவனங்கள் தமது வருமானத்தின் ஒரு பகுதியாக பங்கிலாபம், இலாபம் அல்லது விஷேட வரிகள் போன்றவற்றிகன் மூலம் அரசாங்கத்தின் திரட்டிய நிதியத்திற்கு பங்களிப்புச் செலுத்தல் வேண்டும். ஆயினும், தொலைத்தொடர்பு ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு, தேசிய லொத்தர் சபை, லிட்ரோ கேஸ் கம்பனி, இலங்கைத் தேயிலைச் சபை, ரக்ணா லங்கா பாதுகாப்புக் கம்பனி, பாதுகாப்பு அமைச்சு போன்ற கணிசமான அரசாங்க நிறுவனங்கள் கணிசமான அளவிலான நிதியைத் திறைசேரிக்கு உரிய முறையில் மா்றல் செய்யாது தம்மிடம் வைத்திருப்பதனை நாம் அவதானித்துள்ளோம். எனவே, 2015 ஆம் ஆண்டில், இவ்வரசாங்க நிறுவனங்களிடமிருந்து ரூபா 25,000 மில்லியன்களை வரியல்லாத வருமானமாகச் சேகரிப்பதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்.

**அரசாங்க நிறுவனங்களிலுள்ள பழுதடைந்த வாகனங்களை விற்பனை செய்தல்**

**8.51** அரசாங்கத்திற்குச் சொந்தமான பயன்படுத்த முடியாத கணிசமான அளவிலான வாகனங்கள் முடக்கப்பட்டுள்ளதாக பரந்த அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவை நாளாந்தம் எந்தவிதப் பயன்பாடும் இன்றி பாழாக்கப்பட்டு வருகின்றன. இது அரசாங்க வளங்களை வீணாக்கும் ஒரு நடவடிக்கையாக நாம் நம்புகின்றோம். எனவே, கைவிடப்பட்டுள்ள சகல வாகனங்களையும் மீட்டு, பொது ஏல விற்பனைகளில் அவற்றை விற்பனை செய்வதற்கும், அப்புறப்புடுத்துவதற்கும் தீர்மானம் கொண்டு வரப்படுகின்றது. இந்நடவடிக்கையானது 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,000 மில்லியன்களை உருவாக்கலாம் என மதிப்பிடப்படுள்ளது.

8.52 கௌரவ சபாநாயகர் அவர்களே, பாராளுமன்ற உறுப்பினர்களே, பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் எந்தவிதப் பயனையும் பெற்றுக் கொள்ளாது, பல வாகனங்கள அடைக்கப்படாத நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான சகல வாகனங்களும், அரசாங்க நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்டனவாகும். எனவே, தேசிய சொத்துக்கள் வீண்விரயம் செய்யப்படப்படக் கூடாது என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

8.53 அவ்வாறான செயற்பாடொன்றின் மூலம் சனாதிபதி செயலகம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட அபரிமிதமான வாகனங்களும் ஆடம்பர வாகனங்களுக்கும் பொது மக்களின் நன்மை கருதி அதிகளவிலான நிதியினை உருவாக்குவதற்காக ஒரு நிலைப்பட்ட தெரிவுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

8.54 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் அரசியல் வாதிகளின் அல்லது அரச உத்தியோகத்தர்களின் உத்தியோக பூர்வ பயன்பாடுகளுக்கு எந்த விதமான புதிய வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட மாட்டாது என்பதை செயல்நுட்பம்

வாய்ந்த அரசிறை முகாமைத்துவத்துடனான நல்லாட்சியுடன் பிணைக்கப்பட்ட எமது ஒருமுகப்படுத்தப்பட்ட அடிப்படைக் கொள்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படும்.

**மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளுக்கான இறக்குமதி அனுமதிப்பத்திரம்**

8.55 தற்போது, வாகன இறக்குமதி, மற்றும் வணிகக் கைத்தொழில் தொடர்பான ஒழுங்குவிதிகளில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அநேகமான இறக்குமதியாளர்கள் தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளைப் புறக்கணிக்க முனைவதோடு, அவ்வாறான சகல சந்தர்ப்பங்களிலும் தவறான முறைகளில் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சி செய்கின்றனர். இந்நிலைமையானது அரசாங்கத்திற்குக் கிடைக்கவேண்டிய வருமானங்களை இழப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது.

8.56 இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு நடவடிக்கையாக நேர்மையான முறையில் வாகன வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களை ஊக்குவிக்கும் வகையிலும், புதிய அல்லது பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதில் ஈடுபட்டுள்ளார்களா இல்லையா என்ற விடயத்தினைக் கவனத்தில் கொள்ளாது வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 1.5 மில்லியன்களை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

8.57 முன்மொழியப்பட்டுள்ள அனுமதிப்பத்திரச் செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் வகையில் மோட்டார் வாகன இறக்குமதியாளர்களின் சங்கத்திடமிருந்து பதிவு செய்யப்பட்ட வாகன இறக்குமதியாளர்களின் பட்டியலொன்று பெற்றுக் கொள்ளப்படுவதனால், எதிர்காலத்தில் எவரேனும் ஒருவர் வாகன இறக்குமதியாளராக செயற்படக் கூடிய தற்போதைய செயன்முறை நிறுத்தப்படும்.

**வெளிச்செல்லும் கொள்கலன்களுக்கான கையாளுகையற்ற சான்றிதழ்**

8.58 இலங்கைச் சுங்கம் துறைமுக நடவடிக்கைகளை விரிவாக்கக் கூடிய வெளிச்செல்லும் சரக்குகளுக்கான கையாளுகையற்ற சான்றிதழை வழங்குவதற்கான ஒரு திட்டத்தினை நடைமுறைப்படுத்தும். இதன் மூலம் துறைமுகச் செயற்பாட்டு நடவடிக்கைகள் விருத்தி செய்யப்படும். இச்சான்றிதழை வழங்குவதற்கு ஒரு கொள்கலனுக்கு ஐ.அடொ 10 அறவிடப்படும்..

## 09. ஏனைய பிரேரணைகள்

**தேசிய சிறுநீரக நிதியம்**

9.1 மாண்புமிகு சனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள் தனது தேர்தல் பிரசாரத்தின் போது குறிப்பிட்டவாறு தனது தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தப்படும் நிதி தேசிய சிறுநீரக நிதியத்தில் வைப்பிலிடப்படுமென குறிப்பிட்டிருந்தார். சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் அக்கறையுள்ள இலங்கையர்கள் அனைவரையும் இந்நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய வருமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன். இந்த நன்கொடைகள் வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

**ஊனமுற்ற படையினருக்கான விஷேட வசதிகள்**

9.2 **ஊனமுற்ற படையினரால்** நாட்டுக்கு மேற்கொள்ளப்பட்ட விலை மதிப்பற் சேவையினைக் கருத்திற் கொண்டு கூடியது ரூபா 500,000 இற்கு உட்பட்டு "விரு திரிய" என அழைக்கப்படும் விஷேட கடன் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

**மாற்றுத்திறனுடையோர்களுக்கான ஒத்துழைப்பு**

9.3 மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய அங்கீகாரத்தினை வழங்குவதன் முக்கியத்துவத்தினை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது என்ற வகையில் அவர்களை தேசிய அபிவிருத்தியில் சம பங்காளிகளாக மாற்றுவதற்கு வலுவூட்டுதல் மற்றும் இயலச் செய்வதனூடாக அவர்கள் தங்கிவாழும் நிலையினை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மற்றும் இலங்கை ரெலிக்கொம் ஆகியவற்றில் வெளித் தொழிலாளர்களை உள்வாங்குதல்**

9.4 15 வருடங்களுக்கு அதிக காலம் வெளிச்சேவை தொழிலாளர்களாக கடமையாற்றுபவர்கள் கிரமமான பதவியணிக்கு உள்வாங்கப்படாதிருக்கின்றமை மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் மூலம் எமக்கு அறிவிக்கப்பட்டது. தொழிற்சங்கங்களினால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட சந்திப்புகளின் அடிப்படையில் இந்நிறுவனங்களில் 7 வருடங்களுக்கு அதிக காலம் கடமையாற்றுகின்ற வெளிச்சேவை ஊழியர்களை கிரம ஊழியப்படையில் உள்வாங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**சரசவி மகாபொல புலமைப்பரிசில் அதிகரிப்பு**

9.5 சரசவி மகாபொல புலமைப்பரிசிலானது, முப்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் எனது குருவான காலஞ்சென்ற கௌரவ லலித் அதுலத் முதலி அவர்களினால் ஆரம்பிக்கப்பபட்டதோடு, இப்புலமைப்பரிசில் திட்டமானது இலங்கையின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இது வரை பாரிய அளவிலான ஒரு அனுசரணையாகவும் அமைந்துள்ளது.

9.6 2015 யூலை மாதத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவானது மாதத்துக்கு ரூபா 5,000 வரை அதிகரிப்பதற்கும் முன் மொழிகின்றேன். இதன் மூலம் அதிக அளவிலான மாணவர் குழுக்களுக்கு இலங்கையின் பல்கலைக்கழகங்களின் கல்வியைத் தொடருவதற்கான வாயில்கள் திறக்கப்படும். இவ்வதிகரிப்பானது மகாபொல நம்பிக்கை நிதியத்துடன் கலந்துரையாடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

**முன் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள்**

**9.7** **"**லமா திரிய" எனும் பெயரில் ஒரு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஜுன் மாதத்திலிருந்து முன் பாடசாலை ஆசிரியர்களுக்கு ரூபா 250 மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்கப்படும். இக்கொடுப்பனவானது சிறுவர் பராமரிப்பு அமைச்சில் பதிவு செய்துள்ள முன் பாடசாலை ஆசிரியர்களுக்குத் தொடர்புடையதாகும்.

**தம்மப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு**

**9.8** **"**தகம் திரிய" எனும் பெயரில் புதிய ஒரு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஜுன் மாதத்திலிருந்து தம்மப் பாடசாலை ஆசிரியர்களுக்கு ரூபா 200 மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்கப்படும். இக்கொடுப்பனவைப் பெறுவதற்கான தகைமையைப் பெற்றுக் கொள்வதற்கு தம்மப் பாடசாலைகள் குறிப்பிட்ட சமயத்துடன் தொடர்புடைய அமைச்சில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

**சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்**

9.9 2015 ஜுலை மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் விவசாயிகள், மீனவர்கள், முச்சக்கர வண்டிகளின் சாரதிகள், கொற்றர், தனியார் பாதுகாப்பு அலுவலர்கள், தோட்ட ஊழியர்கள், நடைபாதை வியாபாரிகள், தச்சர், உள்ளடங்கலாக சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும். இப்பிரேரணைத் திட்டம் வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

9.10 இலங்கையின் முதியோர் சனத்தொகை அதிகரித்து வரும் பிரச்சினைக்குக் கடந்த தசாப்த காலப்பிரிவில் ஆட்சியாளர்களினால் போதிய அளவில் தீர்வொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. எமது அரசாங்கம் இதற்குப் பொருத்தமான தீர்வொன்றை முன் வைத்துள்ளது. இதன் கீழ் தற்போது ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமையில்லாத ஊழியர்களுக்கு ஓய்வூதியப் பிரேரணை முறைமையொன்றுக்கு பங்களிப்புச் செலுத்துவதற்கு வாய்ப்பொன்று அளிக்கப்படும்.

**இலங்கை விமான சேவைகள் கம்பனியையும், மிகின் லங்கா விமான சேவைகள் கம்பனியையும் ஒன்றிணைத்தல்**

**9.11** கடந்த பல வருடங்களாக இலங்கை விமான சேவைகள் கம்பனி பாரிய ஒரு நட்டத்தினை அடைந்துள்ளது. 5 வருடங்களுக்குள் மாத்திரம் அடைந்துள்ள நட்டம் ரூபா 100 பில்லியன்களையும் விட அதிகமாகும். பிரதானமாக கடந்த ஆட்சிக் காலத்தில் நிலவிய வினைத் திறனற்ற முகாமைத்துவத்துவமே இந்நட்டத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது இவ்வாறான பாரிய நட்டமொன்றினை நாம் அடையாதிருந்திருந்தால் அந்நிதியிலிருந்து எமக்கு இலங்கை விமான சேவைகள் கம்பனிக்கு புதிய விமானங்கள் பலவற்றைக் கொள்வனவு செய்யக் கூடியதாக இருந்திருக்கும்.

9.12 மிஹின் லங்கா விமான சேவைகள் கம்பனியும் அவ்வாறான நட்டத்தினை அடைந்த மற்றுமொரு நிறுவனமாகும். கடந்த 5 வருட காலப்பிரிவிற்குள் அந்நிறுவனம் அடைந்த திரண்ட நட்டம் ரூபா 14 பில்லியன்களாகும். இந்த அனைத்து நட்டங்களும் இந்நாட்டின் பொது மக்களே ஏற்க வேண்டியுள்ளது. நிலுவையாக உள்ள சகலகடன்களும்பொது மக்களாலேயே செலுத்தப்பட வேண்டியுள்ளது.

9.13 இப்பாரிய அளவிலான நட்டத்திற்கான ஒரு தீர்வாக இவ்விமான சேவைகள் ம்பனிகள் இரண்டினையும் ஒன்றிணைப்பதற்கு முன்மொழிகின்றேன். இதன் மூலம் வளங்களை வினைத் திறனான முறையில் ஈடுபடுத்துவதற்கும், செயற்பாட்டு வினைத் திறனை

விருத்தி செயயக் கூடியதாகவும், மற்றும் படிப்படியாக இழப்புக்களைக் குறைக்கக் கூடியதாகவும் இருக்கும்.

**நாடு பூராவும் வங்கி வசதிகளை அதிகரித்தல்**

9.14 நாட்டின் அநேகமான பிரதேசங்களில் வங்கிச் சேவை வசதிகள் திருப்திகரமான மட்டத்தில் இல்லையென்பது நம்மனைவருக்கும் தெரிந்த விடயமாகும். ஆனால், அநேகமான நகர்ப் பிரதேசங்களில் சகல வர்த்தக வங்கிகளுக்கும் கிளைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனை நாம் கண்டிருக்கின்றோம்.

9.15 இந்நிலைமை நியாயப்படுத்தப்பட்டு மாறுபடுத்தப்படல் வேண்டும். எனவே, பின் தங்கிய பிரதேசங்களில் வங்கிக் கிளைகளை ஆரம்பிக்குமாறு சகல வர்த்தக வங்கிகளுக்கும் அறிவிக்கப்படுகின்றது. அதே போல, ஆரம்ப வைப்பொன்று இன்றி புதிய வாடிக்கையாளர்களுக்கு வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கு அங்கீகாரம் வழங்கம் படி வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்படுகின்றது.

9.16 இந்நாட்டின் சகல பிரஜைகளும் வங்கிக் கணக்கொன்றினைத் திறப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நாம் முயற்சி எடுப்போம். எதிர்காலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் சகல கொடுப்பனவுகளும், பிரதான கொடுப்பனவுகள் வங்கி முறைமையின் ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

9.17 கடன் பெறுநர்களுக்கு வசதியளிப்பதற்கு கடன் வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பான விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் இலகுபடுத்துவதற்கு நான் வங்கிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன். 2015 செப்டெம்பர் மாதத்திலிருந்து புதிய இலகுபடுத்தப்பட்ட முறைமை செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

**நாட்டிற்குள் எடுத்து வரப்படும் அந்நியச் செலாவணியினை அதிகரித்தல்**

9.18 விஷேடமாக, வெளிநாட்டிலுள்ள இலங்கை நிபுணர்களின் வசதிக்காக இலங்கைக்கு வருகை தரும் பயணிகள் எடுத்து வரக் கூடிய அந்நியச் செலாவணியின் உச்ச அளவை ஐஅடொ 25,000 வரை அதிகரிப்பதற்கு முன் மொழியப்படுகின்றது.

**வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக கட்டணம்**

9.19 வெளிநாட்டில் தொழில் புரிநர்கள் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை அனுப்பி பாரியதொரு சேவையினை வழங்குகின்றன. ஆகவே 2015 மே மாதம் 1 ஆம் திகதியிலிருந்து வலுவுக்கு வரும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கட்டணமானது ஒரு தொழிலாளருக்கு 5,000 ரூபாவாக குறைப்பதற்கு முன்மொழிகின்றேன்.

**புலமைச் சொத்துக்களை வர்த்தகமயமாக்கல்**

9.20 எந்தவொரு நாட்டிலும், தற்போதைய பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றமானது அத்தியாவசியமாகவுள்ளது. புதிய கண்டு பிடிப்புக்களின் ஊடாக இன்று மக்களின் வாழ்க்கைத் தரம் பாரிய அளவில்

விருத்தியடைந்தும் மாற்றமடைந்தும் உள்ளது. அதே போல, புதிய கண்டுபிடிப்புக்களின் செயன்முறையானது தொடர்ந்த வண்ணமுமுள்ளது.

**9.21** இலங்கையின் புதிய உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் அதி நவீன உற்பத்திப் பொருட்களைக் கண்டு பிடித்துள்ளார்கள். அவர்கள் தமது உற்பத்திப் பொருட்களின் ஆக்கவுரிமை யைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆயினும், இந்நவீன கண்டு பிடிப்புக்கள் வர்த்தகமயமாக்கப்பட்டுள்ள அளவு தொடர்பாக நாம் மகிழ்ச்சியடைய முடியாதுள்ளது. எனவே, புதிய உற்பத்திப் பொருட்களின் கண்டுபிடிப்பாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களின் வர்த்தக மட்டத்துக்குக் கொண்டு வருவதற்கு விஷேட ஊக்குவிப்பாக புதிய கண்டு பிடிப்பாளர்களின் ஆணைக் குழுவொன்றினை ஸ்தாபிப்பதற்கு முன்மொழிகின்றேன். இப்பிரேரணையை நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா 100 மில்லியன்கள் ஒதுக்கப்படும்.

**சிரேஷ்ட பிரஜைகள் பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தக் கூடிய வகையில் பயண அட்டையொன்றை வழங்கல்**

9.22 நாட்டின் சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கப்படும் வசதிகளை அதிகரிப்பது நம் அனைவரினதும் கட்டாயக் கடமையாக உள்ளது. அதன் பிரகாரம், சிரேஷ்ட பிரஜைகளுக்கு பேருந்துக் கட்டணத்தில் 50 சதவீதத்தினை அறவிடுவதற்கு பயண அட்டை ஒன்றினை வழங்குவதற்கு இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. இவ்வாறான முக்கியமான பிரேரணையொன்றுக்கு ஆதரவளிப்பது தொடர்பாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கத்திற்கு நன்றியினைச் செலுத்துவதற்கு இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

**மீனவர்களுக்கான காப்புறுதித் திட்டம்**

9.23 100 நாள் புரட்சி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வாக்குறுதியளித்ததற்கு இணங்க, நிதி அமைச்சின் ஆதரவுடன் மீனவ சமுதாயத்திற்கு புதிய காப்புறுதி முறைமையொன்றினை அறிமுகப்படுத்துகின்றோம். இக்காப்புறுதித்திட்டம் நிதி அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

**வதியாதார் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்கொன்றினை வைத்திருப்போருக்கு வழங்கப்படும் வட்டி வீதத்தினை அதிகரித்தல்**

9.24 வர்த்தக வங்கிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வதியாதார் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ள இலங்கையின் புலம் பெயர்ந்துள்ள ஊழியர்களின் சேமிப்புக்களுக்கு கிடைக்கப் பெறும் வருடாந்தம் வட்டி வீதம் 3 சதவீதமாகும். அதேநேரம் இலங்கை 5.5 சதவீதத்தின் கீழ் அரச கடன் முறியொன்றின் மூலம் வெளிநாட்டுக் கடனொன்றினைப் பெற்றுக் கொண்டுள்ளது. எனவே, இலங்கையின் புலம் பெயர்ந்துள்ள ஊழியர்கள் இடையூறுகளுக்கு மத்தியில் உழைத்த நிதிக்குக் கவர்ச்சிகரமான வட்டி வீதமொன்றினை வழங்குவதற்கு வதியாதார் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளுக்கு 5 சதவீத வட்டியை வழங்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

9.25 நீண்ட காலம் தனது உறவினர்களைப் பிரிந்து தூர தேசத்தில் பல இன்னல்களுக்கு மத்தியில் உழைக்கப்பட்ட நிதியே வதியாதார் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இவர்கள் தேசிய பொருளாதாரத்தின் விருத்திக்காக மேற்கொண்டுள்ள பங்களிப்பு விலை மதிக்க முடியாததாகும்.

**வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ள இலங்கையர்களுக்கு தேசிய அபிவிருத்திப் பிணைகளை வழங்குதல்**

9.26 வெளிநாடுகளில் சுமார் 2 மில்லியன் இலங்கைப் பிரஜைகள் வாழ்ந்து வருவதோடு,அவர்களில் கணிசமானோர் ஒப்பீட்டளவில் உயர்ந்த அளவிலான வருமானத்தினை உழைக்கக் கூடிய அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அந்நாடுகளில் ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி மட்டமொன்று காணப்படுவதோடு,அவர்களின் சேமிப்புக்களுக்கு 1 சதவீதத்துக்கும் குறைவான வட்டியே கிடைக்கப் பெறுகின்றது.

9.27 இந்நிலைமையின் கீழ், அரசாங்கம் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களில், விஷேடமாக வட மாகாணத்திலிருந்து வெளிநாட்டுக்குப் புலம் பெயர்ந்துள்ள இலங்கையர்களில் இந்நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு பங்களிப்புச் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன். இதற்காக 5 வருட முதிர்வைக் கொண்ட 4.5 சதவீத நிலையான வட்டியொன்றிற்கு ஐஅடொ 25,000 பெறுமதியான குறைந்த முதலீட்டு எல்லைக்குக் கீழ் ”தேசிய அபிவிருத்திப் பிணைகள்” எனும் பெயரில் விஷேட அரசாங்கத்தின் பிணைகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

9.28 இப்பிணைகளுடன் தொடர்பான வட்டி வருமானம், வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும். இப்பிணைகளின் வழங்கல்களை ஊக்குவிப்பதற்கு வினைத் திறனான முறையில் செயற்படுமாறு வர்த்தக வங்கிகளிடம் வேண்டிக் கொள்கின்றேன்.

9.29 தேசிய அபிவிருத்தப் பிணைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு உயர்ந்த அளவிலான வட்டி வருமானமொன்றினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளதோடு, அதன் ஊடாக தேசிய மீளிணைப்பினையும், மற்றும் அபிவிருத்தியையும் விருத்தி செய்யக் கூடியதாகவும் இருக்கும். இதன் மூலம் நாட்டின் வெளிநாட்டு வளங்களைப் பலப்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

**கடன் அட்டையின் ஊடாக வழங்கப்படும் கடனுக்கான வட்டி வீதத்திற்கு வரையறையொன்றை விதித்தல்**

9.30 கடன் அட்டையின் ஊடாக வழங்கப்படும் கடன்களுக்கு வர்த்தக வங்கிகள் மிக உயர்ந்த அளவிலான வட்டி வீதமொன்றினை அறவிடுவதாக எமக்குக் கணிசமான அளவிலான முறையீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன் ஊடாக கடன் அட்டைகளின் வாடிக்கையாளர்களுக்குப் பாதகமான சூழல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதோடு, கடன் அட்டைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு அது மிகவும் மோசமான முறையில் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

9.31 எனவே, கடன் அட்டையின் ஊடாக வழங்கப்படும் கடன்களுக்கு சாதாரண கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீத்தினை விட உச்ச அளவில்ான அதாவது 8 சதவீத வட்டி வீதமொன்றினைச் செலுத்துவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

9.32 இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்புத் திணைக்களத்தின் மூலம் வர்த்தக வங்கிகள் இந்நிபந்தனையினை நடைமுறைப்படபடுத்துவது தொடர்பாகக் கண்காணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்நிபந்தனைகள் புறக்கணிக்கப்படும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான முறையில் உறுதியான முறையில் செயற்படுத்த வேண்டிய நிலை எமக்கு ஏற்படுகின்றது.

9.33 நாட்டின் பொது மக்களை வாழ வைப்பதற்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்வடையச் செய்வதற்கும் கடன் அட்டைப் பாவனையினை மிகச் சிறந்த சாதனமாகப் பயன்படுத்தக் கூடியதாக இருந்தாலும் கூட, இது வரை கடன் அட்டையின் ஊடாக அறவிடப்படும் வட்டியின் அளவினை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு எந்த வித நடவடிக்கைகளும் எடுக்காமையானது மிகவும் துரதிஷ்ட நிலைமையொன்றாக உள்ளது.

9.34 கடன் அட்டைகளின் பயன்பாடுகளின் ஊடாக பாரிய அளவிலான பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகள் ஏற்படக் கூடியதாக உள்ளதால், விஷேடமாக இளைய சமுதாயம் கடன் அட்டையின் பாவனையின் போது புத்தி சாதுரியமாகவும், கவனத்துடனும் செயற்படுமாறு அறிவுறுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

**நுண் நிதிக் கடனுக்கான வட்டி வீதத்திற்கான வரையறையொன்றை விதித்தல்**

9.35 நுண் நிதித் துறை நாட்டின் பொருளாதாரத்துக்கு மிக இன்றியமையாத முறையில் பங்களிப்புச் செலுத்துகின்றது. இது வரை நாட்டில் 10,000 இற்கும் அதிகமான நுண் நிதி நிறுவனங்கள் உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பாரிய அளவிலான சனத்தொகையினை இந்நிறுவனங்களுக்கு உள்ளடக்கக் கூடியதாக உள்ளது.

9.36 இந்நாட்டு மக்களின் வருமானம் உழைக்கக் கூடிய வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்வடையச் செய்வதற்கும் நுண் நிதித்துறை குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்புச் செலுத்தக் கூடியதாக உள்ளதாக நாம் இனங்கண்டுள்ளோம்.

9.37 நுண் நிதி நிறுவனங்கள் அறவிடும் வட்டி வீதம் பாரிய அளவில் வேறுபடுகின்றது. இவ்வாறு பாரிய அளவில் வேறுபடும் உயர்வான வட்டி வீதம் நுண் நிதித துறையின் முன்னேற்றத்துக்குத் தடையொன்றாக அமைந்துள்ளதோடு, சமூகத்திலுள்ள வறிய மக்களை வறுமையிலிருந்து மீட்கக் கூடியதாகவும் இருந்த சிறந்த வாய்ப்பு இதன் மூலம் கிடைக்காமல் போயுள்ளது.

9.38 சகல நுண் நிதிக் கடன் வசதிகளையும் வழங்கும் நிறுவனங்கள் தம்மால் வழங்கக் கூடிய சகல பங்கேற்பு எண்ணக்கருவைப் பின்பற்றி தமது வாடிக்கையாளர்களுக்கு கவர்ச்சிகரமான சிறிய வட்டி வீதமொன்றின் கீழ் நிதி உதவியை வழங்குவதன் மூலம்

பாரிய அளவிலான தாக்கமொன்றினை ஏற்படுத்த முடிந்ததாக குறிப்பிட விரும்புகின்றேன்.

9.39 நுண் நிதிக் கைத்தொழிலின் உண்மையான வட்டி வீதம் வருடத்திற்குக் கூடியது 40 சதவீதம் வரையில் வரையறுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் துறைக் கைத்தொழிலுக்குப் புத்துயிர் அளிப்பதற்கான விஷேட நிகழ்ச்சித் திட்டம்**

9.40 வங்கி முறைமையின் ஆதரவுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலை தரமுயர்த்துவதற்கும், மீள் கட்டமைப்பதற்கும், நவீன உருவாக்க நிகழ்ச்சித் திட்டமொன்று நிதி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும். இதன் கீழ் கடன் பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ள அவ்வாறான கைத்தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுவதோடு அதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் சாத்தியமான வழிகளைப் பலப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**கடன் தகவல் பணியகத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களினதும் கடன் அட்டைகளின் உரிமையாளர்களினதும் சிரமங்களை நீக்குவதற்கான உதவி**

9.41 250,000 அல்லது அதற்குக் குறைந்த கடன் நிலுவைகளைக் கொண்டவர்களுக்கு ஆறு மாதங்களில் மீள் செலுத்தக் கூடிய திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கு உதவியளிக்கப்படும். இச்செயற்படுத்துகை செயன்முறையானது வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்படும்.

**வைப்புக்களின் பொறுப்புக்களுடனான நட்டத்துக்கு உள்ளாகிய வங்கியல்லாத நிதி நிறுவனங்கள்**

**9.42** இலங்கை மத்திய வங்கியினதும் மற்றும் நிதி அமைச்சினதும் ஈடுபாட்டுடன் நட்டத்துக்கு உள்ளாகிய வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் வைப்புக்களில் காணப்பட்ட வைப்புக்களின் உரிமையாளர்களுக்கு உதவி வழங்குவதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. இப்பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வொன்றினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் இச்சிரமங்களை உருவாக்கிய நிதி நிறுவனங்களின் பணிப்பாளர்கள் மற்றும் வைப்பாளர்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இச்செயற்பாடு இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும்.

**அரச நிறுவனங்களின் வர்த்தக விளம்பரங்களை வரையறுத்தல்**

**9.43** அரசியல் தலைவர்களுக்கு அரசாங்க நிறுவனங்களின் செலவில் பத்திரிகைகளில் வர்த்தக விளம்பரங்களைப் பிரசுரிப்பது பெருமளவில் இடம் பெற்று வருவதாக எமக்குத் தெரிய வந்துள்ளது அரசியல் பின்னணியொன்றுடனான அவ்வாறான வர்த்தக விளம்பரங்கள் அரசாங்க செலவீனத்திற்குப் பாரமாக மாத்திரமே அமைந்துள்ளன.

9.44 எனவே, அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் குறிப்பிட்ட நிரல் அமைச்சிற்கு அவசியமான விளம்பரங்களைச் செயலாளரின் அங்கீகாரத்துடன் பிரசுரிப்பதைத் தவிர

அரசியல் ரீதியான வர்த்தக விளம்பரங்களைப் பிரசுரிப்பது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்படல் வேண்டும்.

9.45 அதே போல, இது அரசாங்க நிறுவனங்களில் அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களினால் அரசியல் பின்னணியொன்றுடன் விளம்பரங்களைப் பிரசுரிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் அங்கீகாரம் வழங்கப்படாத அவ்வாறான விளம்பரங்களைப் பிரசுரிப்பதனால் ஏற்படும் செலவீனங்கள் தனிப்பட்ட முறையில் அவர்களால் ஏற்கப்படல் வேண்டும்.

9.46 அதே போல, இது அரசாங்க நிறுவனங்களினால் வெளியிடப்படும் அரசியல் வாதிகளின் படங்கள் மற்றும் தகவல்களை உள்ளடக்கிய நாள் காட்டிகள், நாளேடு, போன்றனவற்றை பிரசுரிப்பவைகளுக்கும் பொருந்தும்.

**மருந்துப் பொருட்கள்**

9.47 இத்துறையில் காணப்படும் பெருமளவிலான சாத்தியத்தன்மை மற்றும் மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்காக நாட்டிலிருந்து வெளிச் செல்லும் வெளிநாட்டுச் செலாவணி அளவு என்பவற்றைக் கருத்திற் கொண்டு நாங்கள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மருந்துப் பொருள் உற்பத்தியாளர்களை இத்துறையில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்கின்றோம். இவ்வுற்பத்தியாளர்களின் உற்பத்திகளுக்கு ஒரு நிலையான சந்தையை உறுதி செய்யும் நோக்குடன் மீள் கொள்வனவு முறைமையொன்று அறிமுகம் செய்யப்படும்.

**இடைப்பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கான ஊக்குவிப்பு**

9.48 நாட்டில் காணப்படும் காணிப் பாவனையை உச்சப்படுத்தும் நோக்குடன் இடைப்பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயத்துறை தொழில்முயற்சியாளர்களுக்கு வரி ஊக்குவிப்புக்களை அறிமுகம் செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்நடவடிக்கைகள் மூலமாக உருவாக்கப்படும் இலாபங்கள் மீதான வருமான வரிக்கு 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும்.

**மரக்கறி மற்றும் உணவு பதனிடல் கைத்தொழில்**

9.49 உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள் மற்றும் பழங்களில் ஒரு குறிப்பிடும் தொகையான அளவு வீணாக்கப்படுவது அவதானிக்கப்படுகின்றது. நாட்டில் மரக்கறி மற்றும் உணவு பதனிடல் கைத்தொழிலை ஊக்குவிக்கும் முகமாக இத்துறையில் வியாபாரங்களை ஆரம்பிக்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு 50 சதவீத வரிக் குறைப்பை பெற்றுக் கொடுப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**உள்ளூர் கட்டிட நிர்மாணக் கைத்தொழிலாளர்களை சர்வதேச ரீதியில் விரிவாக்கலுக்கான ஊக்குவிப்பு**

9.50 உள்ளூர் கட்டிட நிர்மாணத்துறைக் கம்பனிகளானது தனது இயலளவு மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்து கொண்டுள்ளதை காண முடிகின்றது. இப்பின்னணியில் உள்ளூர் நிர்மாணக் கம்பனிகளானது தனது நடவடிக்கைகளை வெளிநாடுகளில் விரிவாக்குவதற்காக ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

இதனடிப்படையில் அந்நடவடிக்கைகள் மூலம் சம்பாதிக்கின்ற இலாபங்களுக்கு வரி விலக்களிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

9.51 இலங்கைக்குள் நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள் உள்நாட்டுப் பங்காளிகளுடன் இணைந்து செயற்படுதல் வேண்டும். இதன் மூலம் நாட்டிற்கு புதிய தொழில்நுட்பங்கள் உள்வாங்கப்படுவதோடு உள்நாட்டவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களும் உருவாக்கப்படும்.

**கடந்த 6 மாத காலப்பகுதியில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களை மீளாய்வு செய்தல்**

9.52 பிரதான மூலதனக் கருத்திட்டங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் அக்கருத்திட்டங்களின் கிரயம் நியாயமானவையா என்பது பற்றியும் அத்தகைய ஒப்பந்தங்களை வழங்கும் போது உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பது பற்றி மதிப்பீடு செய்வதற்கும் மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

9.53 கடந்த காலத்தில் இடம் பெற்ற பெரும்பாலான கருத்திட்டங்கள் முறையான மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படாமல் நியாயப்படுத்தப்படாத முன்மொழிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்கால முன்மொழிவுகளை வெளிப்படை தன்மையுடன் உரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில் பொருளாதார அலுவல்கள் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் கீழ் குழுவொன்று நியமிக்கப்படும்.

**காணிக் கொள்வனவு அல்லது வீடு நிர்மாணத்திற்காக ஊழியர் சேமலாப நிதிய மீதியினை மீளப் பெறுதல்**

9.54 காணிக் கொள்வனவு அல்லது வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஊழியர் சேமலாப நிதியத்தின் மீதியில் 30 சதவீதத்தினை மீளப் பெறுவதற்கான கோரிக்கைகள் தொழிற்சங்கங்களினாலும் ஊழியர்களினாலும் மிக நீண்ட காலமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஊழியர்களின் இவ்வேண்டுகோளினை நிறைவேற்றுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**வீண் விரயம் மற்றும் ஊழல்களும்**

9.55 எமது அரசாங்கமானது வீண் விரயங்களையும் ஊழல்களையும் ஒழிப்பதில் மிகவும் அவதானத்துடன் இருக்கின்றது. முன்னைய அரசாங்கத்தின் முறைகேடான ஆட்சியின் போது மக்களின் பணம் கட்டுப்பாடற்ற முறையில் செலவிடப்பட்டிருக்கின்றமையானது நிதி எந்தளவு பிழையான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்து கொள்வதற்கான பாடமாக அமைகின்றது. ஊழலை ஒழிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் எடுப்போம்.

**அரசியல் நோக்கங்களுக்காக தேசிய லொத்தர் சபையின் நிதிகள் பயன்படுத்தப்பட்டமை**

தேசிய லொத்தர் சபையின் நிதிகளிலிருந்து ஏறக்குறைய ரூபா 270 மில்லியன்கள் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறான முறைகேடான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை மிகவும் துரதிஷ்டவசமானதாகும். மிகவும் பரிதாபகரமான

நிலைமை யாதெனில் தேசிய லொத்தர் சபையானது மஹாபொல பயனாளிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்குக்கூட நெருக்கடிகளை எதிர்நோக்கிய சந்தர்ப்பத்தில் சுகாதார அமைச்சு இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய பெருந்தொகையான நோயாளிகளின் நீண்ட பட்டியலினைக் கொண்டிருந்தது.

**தேசிய சேமிப்பு வங்கி பங்குகளின் கொடுக்கல் வாங்கல்கள்**

தேசிய சேமிப்பு வங்கியின் பங்குகள் தொடர்பில் உள்ளக கையாளலொன்று பாரியளவில் இடம் பெற்ற வேளையில் குறித்த மோசடி நிதி அமைச்சினதும் தேசிய சேமிப்பு வங்கியின் அதிகாரிகளின் உடனடி நடவடிக்கையினால் நிறுத்தப்பட்ட உண்மையினை யாவரும் அறிவர். இவ்வாறான முறைகேடான பங்கு மோசடியில் சம்பந்தப்பட்டவர்களை நீதித்துறை முன்நிறுத்தி வெளிச்சத்திற்கு கொண்டு வருவதனை எமது அரசாங்கம் உறுதிப்படுத்தும்.

**வடக்கு அதிவேகப் பாதைக்கான அதிகரித்த செலவினம்**

வடக்கு அதிவேகப் பாதைக் கருத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட மதிப்பீடானது எமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் 50 பில்லியன் ரூபாவுக்கு அதிகமான செலவினத்தினை ஏற்படுத்தியிருக்கின்ற விடயம் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

**எம்ஐ 17 உலங்கு வானூர்திகள் கொள்வனவு**

200 மில்லியன் ஐ.அ.டொலர் செலவில் கொள்வனவு செய்யப்பட வேண்டிய இக்கொடுக்கல் வாங்கல் 450 மில்லியன் ஐ.அ.டொலர் செலவினத்தில் இடம் பெற்றிருப்பதுடன் அதன் மூலம் 250 மில்லியன் ஐ.அ.டொலர் (ரூபா 33 பில்லியன்) நட்டமேற்பட்டுள்ளது என எமக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

**உபாயமற்ற முதலீட்டுப் பிரதேசங்களில் முதலீடு செய்யப்பட்டமை - ஷீசெல்ஸ் வரி விலக்கு**

வரி விதிப்பனவு தொடர்பில் நன்மதிப்பினை பெற்ற நாடொன்றான ஷீசெல்ஸ் நாட்டிற்குள் திடீரென நுழைந்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு உத்தியோகபூர்வ கணக்காய்வு மற்றும் விசாரணைச் செயன்முறையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. அரச வங்கியின் சர்வதேசக் கிளையொன்று ஷீசெல்ஸ் நாட்டில் ஆரம்பிக்கப்படவிருந்தமை இதற்கான மற்றுமொரு காரணமாகும். இதற்காக தற்பொழுது காணப்படும் சாத்தியவள அறிக்கைகள் நுணுக்கமாக பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் மதிப்பீடு செய்யப்படும்.

**பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை பெற்றுக் கொள்ள முயற்சித்தமை**

நாட்டின் பொருளாதாரத்தினை மோசமாகப் பாதிக்கக் கூடியளவு நிதி எவ்வாறு விரயமாக்கப்பட்டுள்ளது என்பதற்கான சிறந்த உதாரணங்கள் சிலவற்றினை கடந்த ஆட்சி எமக்கு வழங்கியுள்ளது. பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் தொடர்பில் மக்களின் பணத்திலிருந்து செலவிடப்பட்ட தொகையானது ரூபா 760 மில்லியனுக்கு அதிகமாகும். இவ்விடயத்தினை செய்விப்பதில் சில அரசாங்க உத்தியோகத்தர்கள் நேரடியாக ஈடுபட்டிருக்கின்றமை மன வேதனைக்குரிய விடயமாகும்.

**ஸ்ரீ லங்கன் விமான சேவை மற்றும் அதிதிகள் அறை**

இலங்கை செல்வந்தர்கள் மற்றும் வறியவர்களுக்கிடையில் நியாயமற்ற இடைவெளியினை கொண்டிருப்பதுடன் இவ் இடைவெளியினை நிரப்புவதற்கு மிகவும் குறைவான முயற்சிகளே எடுக்கப்பட்டுள்ளன. அண்மைக்கால விமானக் கொள்வனவுகள் எமது தேசிய விமானச் சேவைகள் நிறுவனத்தினை நட்டமடையச் செய்துள்ளதுடன் 15 மில்லியன் ஐ.அ.டொலர் செலவில் (ரூபா 1.95 பில்லியன் பெறுமதிக்குச் சமனான) அதிதிகளுக்கான அலகொன்று இணைக்கப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டமை மிகவும் மோசமான வீண் விரயமாகும். ஆடம்பர உபகரணங்கள் பொருத்தப்படாமல் செலவு பற்றி மீள பேரம்பேசல் இடம் பெறாமை ஏன் என்ற கேள்வி எழுவதுடன் பாரிய கையாடல்களில் இதுவும் ஒரு விடயமா எனவும் கேள்வி எழும்புகின்றது. இவ்வாறான வீண் விரயங்கள் தொடர்பில் எமது அரசாங்கம் கவனமாக இருப்பதுடன் அதற்கான நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கும்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச வருமானம் மற்றும் செலவினங்களின் சுருக்கம் அட்டவணை I மற்றும் II இல் குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை 2015 ஆம் ஆண்டிற்கான மொத்த கடன் பெறல் வரையறை, ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மற்றும் 2015 இற்கான திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் சுருக்கம் என்பன முறையே III மற்றும் IV அட்டவணைகளில் தரப்பட்டுள்ளது.

**"குறுகிய காலத்திற்குள் எம்மால் ஏழைகளையோ செல்வந்தர்களையோ உருவாக்க முடியாது. ஆனால் குறுகிய கால எல்லைக்குள் வறுமையற்ற சமூகமொன்றினை எம்மால் கட்டியெழுப்ப முடியும்."**

**முடிவுரை**

வரவு செலவுத்திட்டம் தொடர்பான ஆவணங்களைத் தயாரிப்பதற்கு குறிப்பிட்ட கால வரையறைக்குள் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வது கடினமான முயற்சி ஒன்றாகும். இவ்வாறான சகல விடயங்களையும் உள்ளடக்கிய ஆவணமொன்றினை 20 நாட்களுக்குள் தயாரித்து வெளியிடுவது தேவையான தரவுகள் மற்றும் அவசியமான தகவல்களை சேகரிப்பதில் எனது அமைச்சின் அலுவலர்களின் கூட்டு முயற்சி பாராட்டப்படக் கூடியதாகும்.

வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் 100 நாள் புரட்சிக்கான சரியான திட்டமிடல் ஒன்றாக இன்று சமர்ப்பிக்கப்படுகின்ற இவ்வறிக்கையினை தயார்படுத்துவதற்கு கடுமையான போராட்டம் இடம் பெற்றது. இவ்வறிக்கையில் ஏதேனும் தவறுகள் காணப்படுமாயின் அதனை அலுவலர்கள் எதிர்நோக்கிய சவால்களாக இருக்குமென கருதி மன்னிக்குமாறு இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். எவ்வாறாயினும், கௌரவ சபாநாயகர் அவர்களே, திறைசேரியின் செயலாளர் மற்றும் அவரது உத்தியோகத்தர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனெனில் அவர்கள் எவ்வித எதிர்பார்க்கைகளுமின்றி இந்த அறிக்கையினை இன்று சமர்ப்பிப்பதற்காக நடுநிசி வரை விழித்திருந்தனர்.

மேலும், கௌரவ சபாநாயகர், அதிமேதகு சனாதிபதி, கௌரவ பிரதமர், கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் இன்று சமூகமளித்திருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்வதுடன் இதில் வழங்கப்பட்டுள்ள உதவிகள் இலங்கை மக்களுக்கு சந்தோசத்தினை வழங்கும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

**எமது தேசத்திற்கு இறைவனின் ஆசிர்வாதம் உரித்தாகட்டும்.**

**கடவுள் எமது தாய்நாட்டை ஆசீர்வதிப்பாராக.**

## அட்டவணை I : வருமான முன்மொழிவுகள் சுருக்கம்

*ரூபா.மில்லியன்*

| | |
|---|---|
| விசேட வியாபாரப் பண்ட வரியைத் திருத்துதல் | (8,350) |
| கோதுமை விதை இறக்குமதி வரியினை நீக்குதல் | (8,000) |
| சொகுசு வீட்டு வரி | 1,000 |
| புலம்பெயர் வரி | 100 |
| அதியுயர் இலாப வரி | 50,000 |
| உ.செ.வரி எல்லைகளைத் திருத்துதல் | (575) |
| மோ.சைக்கிள், முச்சக்கர வண்டி உதிரிப்பாக இறக்குமதி வரியினை நீக்குதல் | (500) |
| மோ. வாகன இறக்குமதி உற்பத்தி(விசேட ஏற்பாடுகள்)வரியினைத் திருத்துதல் | 7,000 |
| காசினோ சூதாட்ட விசேட வரி | 5,000 |
| பந்தயம் மற்றும் சூதாட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் | 400 |
| மதுபானம் மற்றும் மாவூரல் உற்பத்தி விசேட வரி | 5,000 |
| மதுசார விற்பனை நிலையங்கள் மற்றும் தவறணை விசேட வரி | 1,000 |
| மது வரி அனுமதிப்பத்திர கட்டணத் திருத்தம் | 600 |
| சீமெந்து மற்றும் உருக்கு இறக்குமதி வரி திருத்தம் | (3,000) |
| உரிமம் பெற்ற செல்லிட தொலைபேசி இயக்குநர் வரி | 1,250 |
| செய்மதி தொழில்நுட்பத்தினூடாக நேரடி வீட்டுக்கு வழங்கும் சேவை கட்டணம் | 2,000 |
| செய்மதி நிறுவலுக்காக இலங்கையில் ஒதுக்கப்பட்ட நிலத்திற்கான வரி | 1,000 |
| விதிப்பனவு/பங்கிலாபம் | 25,000 |
| தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 10,000 |
| எரிவாயு நிறுவனம் | 10,000 |
| இலங்கை தேயிலைச் சபை | 2,500 |
| சுற்றுளா சபை | 1,000 |
| கம்பனிகள் பதிவாளர் | 1,500 |
| அரச நிறுவனங்களில் பழுதடைந்த வாகனங்களின் விற்பனை | 1,000 |
| வாகன இறக்குமதியாளர் உரிமக் கட்டணம் | 375 |
| **மொத்தம்** | **80,300** |

***குறிப்பு :***
***அரசாங்கம் இழக்கும் வருமானம்***

| | |
|---|---|
| மது வரி இழப்பு | 8,000 |
| உள்ளுரில் பொருத்தப்பட்ட வாகனங்கள் மூலம் | 15,000 |

## அட்டவணை II : செலவின முன்மொழிவுகள் சுருக்கம்

*ரூபா. மில்லியன்*

| | |
|---|---|
| அரச துறையில் சம்பளத்தினை அதிகரித்தல் | 89,700 |
| அரச துறையில் ஓய்வூதிய கொடுப்பனவினை அதிகரித்தல் | 4,900 |
| சமுர்த்தி கொடுப்பனவினை அதிகரித்தல் | 8,000 |
| சிரேஷ்ட பிரஜைகளது பண வைப்புக்கான 15% வட்டி விகிதம் | 4,000 |
| கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கொடுப்பனவு | 1,000 |
| விவசாயிகளின் கடன்களை 50% ஆல் குறைத்தல் | 2,500 |
| தேயிலைக்கான உத்தரவாத விலை | 5,000 |
| இறப்பருக்கான உத்தரவாத விலை | 3,600 |
| திரவப் பாலுக்கான உத்தரவாத விலை | 3,000 |
| இளைஞர் பாராளுமன்றம் | 200 |
| பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினை அதிகரித்தல் | 1,125 |
| மீனவர் காப்புறுதித் திட்டத்திற்கான அரச பங்களிப்பு | 75 |
| தங்க ஆபரண அடகு வைப்பிற்கான சலுகைத் திட்டம் | 7,000 |
| நிரந்தர சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு | 2,000 |
| முன்பள்ளி மற்றும் தஹம் (சமய) பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு | 250 |
| கொழும்பு நகர் குடியிருப்பாளர்களுக்கான சலுகைத் திட்டங்கள் | 1,000 |
| புதிய கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக் குழுவினைத் தாபித்தல் | 100 |
| வீண் செலவினங்களைக் கட்டுப்படுத்தலும் எரி பொருள் , மின் கட்டணங்களைக் குறைப்பதனூடாக நிருவாகச் செலவினத்தினைக் குறைத்தலும் | (38,000) |
| **மொத்தம்** | **95,450** |

## அட்டவணை III : மொத்த கடன்பெறுகை தேவைப்பாடுகள் - 2015
## (கணக்கீட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏற்பாடுகள்)

| **விடயம்** | **ரூபா.பில்லி** |
|---|---|
| மொத்த வருமான பெறுகைகள் மற்றும் மானியம் | 1,622 |
| படுகடன் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக மொத்த கொடுப்பனவுகள் | 3,097 |
| முற்பணக் கணக்கு தொழிற்பாடுகளுக்கான ஏற்பாடு | 4 |
| பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளில் கணக்கு வேறுபாடு மீதான ஆபத்து ஏற்பாடு | 60 |
| அரச உடமை தொழில்முயற்சி ஐந்தொகை மீள்கட்டமைப்புக்கான எதிர்பாரா பொறுப்பு மற்றும் முறி வழங்கல் | 170 |
| எதிர்பாரா பொறுப்புக்கள் | 30 |
| அரசாங்க பிணையங்களின் புத்தக / காசு பெறுமதி தீருத்தம் | 41 |
| அரசாங்க கணக்குகளில் பதியப்பட வேண்டிய மொத்த கடன் தேவைப்பாடு | 1,780 |
| அவற்றில், மொத்த படுகடன் மீள்கொடுப்பனவுகள் | 840 |

**இணைப்பு I : பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட உத்தரவாதப் பட்டியல் - 2014.12.31 வரை**

| இல | நிறுவனத்தின் பெயர் | திறைசேரி உத்தரவாதத்தின் பெறுமதி (ரூபா.மில்) |
|---|---|---|
| 1 | இலங்கை மின்சார சபை | 17,985 |
| 2 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 206,724 |
| 3 | வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சியத் தொதி | 4,635 |
| 4 | வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற போக்குவரத்து கூட்டுத்தாபனம் | 10,670 |
| 5 | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் | 157 |
| 6 | சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலக்கழகம் | 27,726 |
| 7 | வரையறுக்கப்பட்ட லக்தனாவி லிமிடெட் | 5,984 |
| 8 | வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி | 5,000 |
| 9 | வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்)நிறுவனம் | 371 |
| 10 | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 7,550 |
| 11 | வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் | 8,600 |
| 12 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 14,114 |
| 13 | நெல் சந்தைப்படுத்தல் சபை | 6,599 |
| 14 | மக்கள் வங்கி ஓய்வுதிய நம்பிக்கை நிதியம் | 5,000 |
| 15 | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 157,319 |
| 16 | வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்க நிறுவகம் | 50 |
| 17 | இலங்கை காணி மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | 2,000 |
| 18 | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் | 400 |
| 19 | அரச வர்த்தக (கூட்டுறவு மொத்த) கம்பனி லிமிடெட் | 32 |
| 20 | எஸ்டிஸி ஜெனரல் டிரேடிங் கம்பனி லிமிடெட் | 460 |
| 21 | நகர அபிவிருத்தி அதிகார சபை | 21,372 |
| 22 | வெஸ்ட் கோஸ்ட் பவர் (தனியார்) லிமிடெட் | 21,994 |
| | **மொத்தம்** | **524,741** |

*மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**இணைப்பு II : உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்காக அ.தொ.மு பெறப்பட்ட வெளிநாட்டு கடன்கள்/ ஐந்தொகைக்குப் புறம்பாக கடன் பெறுதல்**

| கருத்திட்டம் | நிறுவனம் | பெறுமதி (ரூ.மில்) |
|---|---|---|
| புத்தளம் அனல்மின் கருத்திட்டம் | இலங்கை மின்சார சபை | 160,195 |
| ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி கருதிட்டம் | இலங்கை துறைமுக அதிகார சபை | 122,568 |
| மத்தல சர்வதேச விமான நிலைய கருத்திட்டம் | விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து (இலங்கை) லிமிடெட் | 25,909 |
| **மொத்தம்** | | **308,672** |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

குறிப்பு :

கீழ் வரும் கடன் உடன்படிக்கை காரணமாக நிகழ்சாத்தியப் பொறுப்பு மேலும் அதிகரிக்கிறது.

| | ரூபா.பில் |
|---|---|
| ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி கருத்திட்டம் இரண்டாம் கட்டம் | 106 |
| யப்பான் டிஜிடெல் தொலை தொடர்பு கருத்திட்டம் | 20 |

**இணைப்பு III: தற்போதைய வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்கள் தொடர்பான வட்டி வீதங்களின் சுருக்கம்**

| **அபிவிருத்திப் பங்காளர்** | **வருடாந்த வட்டி வீதம்** | |
|---|---|---|
| | **நிலையான** | **மிதக்கும்** |
| **இருதரப்பு** | | |
| ஜப்பான் | 0.10 % - 2.2% | |
| சீன அபிவிருத்தி வங்கி | | ஐ.அ.டொலர் +2.90% இற்கான 6 மாத லிபோர் |
| இந்தியா | | ஐ.அ.டொலர் +0.50% இலிருந்து 2.0% வரையான 6 மாத லிபோர் |
| குவைற் | 1% - 2.5% | |
| கொரியா | 0.1 % - 1.5% | |
| ஜேர்மனி | 2.2% | |
| சவூதி நிதியம் | 1.13 % - 2.15% | |
| | | |
| **பல்தரப்பு** | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 1 % - 1.5% | ஐ.அ.டொலர் +0.6% இற்கான 6 மாத லிபோர் |
| உலக வங்கி<br>- மீள் கட்டமைப்பு, அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி<br>- சர்வதேச அபிவிருத்தி அமைப்பு | 0.75% | ஐ.அ.டொலர் +0.6% இற்கான 6 மாத லிபோர் |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 0.75% | |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் | 4.1% - 4.6% | |
| | | |
| **ஏற்றுமதிக் கடன்** | | |
| இறக்குமதி ஏற்றுமதி வங்கி சீனா | 2% - 6.5% | ஐ.அ.டொலர் +1.0% இலிருந்து 3.0% வரையான 6 மாத லிபோர் |
| புங்கோ பில்போ விஸ்காயா ஆஜன்டீரியா ஸ்பெயின் | | ஐ.அ.டொலர் +2.1% இற்கான 6 மாத யூரிபோர் |
| கெலியோன் கிறடிற் எக்ரிகோல் சீஐபி பிரான்ஸ் | 4.95% | |
| கோப் சென்ரலே ரெயிபைசன் - பொரின்லீன் வங்கி நெதர்லாந்து | 4.94% - 5.0% | ஐ.அ.டொலர் +1.35% இலிருந்து 1.95% வரையான 6 மாத லிபோர் |
| ஏற்றுமதி இறக்குமதி வங்கி ஹங்கேரி | 1.03% | |
| போர்டிஸ் வங்கி பெல்ஜியம் | 0.80% | |
| எச்எஸ்பிசி வங்கி (ஐக்கிய இராச்சியம்) | | ஐ.அ.டொலர் +2.0% இற்கான 6 மாத லிபோர் |
| நோர்டியாமெ வங்கி டென்மார்க் | | ஐ.அ.டொலர் +1.0% இற்கான 6 மாத லிபோர் |
| யுனிகிறடிற் வங்கி ஆஸ்திரியா | 1.4% | |
| | | |
| | | |
| **வர்த்தக வங்கிகள்** | | |
| சர்வதேச நாணய முறி விநியோகம் (முதிர்ச்சியடைய வேண்டியுள்ளது.) | 5.13% - 6.25% | |

*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*